பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | பங்குனி 08 | சனிக்கிழமை | 25.03.2023 | கதிர் 136

# நெருக்கடி ஏற்பட முன் தேர்தலை நடத்துங்கள்

## ஜனாதிபதியிடம் எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள்



நாட்டில் நெருக்கடிகள் பல ஏற்படுவதற்கு முன்னர் மக்கள் கோரும் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும் போது எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் கூறினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதற்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி இந்த செய்தியாளர் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது. ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

நியதிச் சட்டங்களை யாக்கும் அதிகாரம் மாகாண ஆளுநருக்குக் கிடையவே கிடையாது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இது விடயம் நேற்றுத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தம்மிஷ்டப்படி - எதேச்சாதிகாரமாக - மேற்கொண்ட சட்டங்களை யாக்கும் நடவடிக்கை தவறானது - அத்துமீறல் செயற்பாடு - என்பது தெளிவாகியிருக்கின்றது.

இந்த அதிகாரம் அவருக்குக் கிடையாது என்பதை சட்டமா அதிபரே எழுத்தில் அவருக்கு இப்போது அறிவுறுத்தி இருக்கின்றார் என்று தற்சமயம் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றது.

அப்படியானால், கடந்த வருடத்தில் இரண்டு நியதிச் சட்டங்களை வர்த்தமானி மூலம் தம்பாட்டில் வடக்கு ஆளுநர் அறிவித்தமை சட்டமா அதிபரின் ஆலோசனை கூட இல்லாமல் எடுக்கப்பட்ட ☞2

## திறைசேரியின் செயலாளர் சிறப்புரிமையை மீறினார்

### எதிர்க்கட்சி பதில் குற்றச்சாட்டு

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு வரவு, செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்காது திறைசேரிச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறியுள்ளார் என்று குறிப்பிட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலளாரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டாரவினால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடத்தில் முறைப்பாடு கையளிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கானநிதியைத் தடுக்கக்கூடாது என்று திறைசேரிச் செயலருக்கு ☞2

## ஹரின் விட்ட சவால்



அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அக் கட்சியின் கொழும்பு மாநகர சபை வேட்பாளருமான முஜிபுர் ரஹ்மானுக்குப் பகிரங்க சவால் ஒன்றை விடுத்துள்ளார்.

ஹரின் பெர்னாண்டோ ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்குபோது நாமல் ராஜபக்ஷவுடன் தொடர்பை ☞2

## வவுனியாவில் மினி சூறாவளி



வவுனியாவிலவெள்ளிக்கிழமை மாலை திடீரென வீசிய மினிசூறாவளியினால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்தன.

வவுனியாவில் கடந்த சில தினங்களாக மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகின்றது. வெள்ளிக்கிழமை மாலை மினிசூறாவளியுடன்கூடிய கடும் மழை பொழிந்தது. ☞2

### அரசமைப்பை மீறி நடந்துகொண்ட

# ஆளுநர் ஜீவன் தியாகராசா உடன் பதவி விலகவேண்டும்

## மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.25

அரசமைப்பைப் பேணிப் பாதுகாப்பேன் எனச் சத்தியம் செய்துபதவிஏற்றவடக்குஆளுநர் அதனை மீறியுள்ளார். சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றில்தெரிவித்தகருத்துமூலம் இது எண்பிக்கப்படுவதனால் ஆளுநர் ஜீவன் தியாகராஜா உடனடியாகப் பதவி விலக வேண்டுமெனவடக்குமாகாண சபையின்முன்னாள்எதிர்க்கட்சித் தலைவரும்மீன்பிடிஅமைச்சின் செயலாளருமான சின்னத்துரை தவராசா தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலா பணியகம் மற்றும் வாழ்வாதார முகாமைத்துவ நியதிச் சட்டங்கள் என இரு சட்டங்களை ஆளுநர் வர்த்தமானியில் பிரசுரித்தார். இதற்கு எதிராக வடக்குமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தொடுத்த வழக்கு நேற்றைய தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் இடம்பெற்றபோது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சட்டவாளர், வடக்கு ஆளுநருக்கு நியதிச் சட்டத்தை உருவாக்கும் அதிகாரமில்லை என்று அவருக்கு ☞2




## "நீதியரசர்கள் மீது கை வைக்காதே" சட்டத்தரணிகள் நேற்றுப் போராட்டம்

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பில் இடைக்கால உத்தரவை பிறப்பித்த உயர் நீதிமன்ற நீதியரசர்களை நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழு முன்பாக அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்ற வளாகத்தில்வெள்ளிக்கிழமை அறவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சட்டத்தரணிகள் மகா சபையினால்ஏற்பாடுசெய்யப் பட்டிருந்த இந்தப்போராட்டமானது, 'நீதியரசர்கள் மீது கை வைக்காதே எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிந்தது.

போராட்டத்தில் ☞3

## அனைவரும் நம்பும் ஆடுகளமாக இலங்கையை மாற்ற வேண்டும்

### சாகல ரத்நாயக்க

அனைத்துதரப்பினரும் நம்பிக்கை கொள்ளும் ஆடுகளமாக இலங்கையை மாற்றியமைக்கவேண்டும் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் தலைவருமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ரோயல் கல்லூரியில் வெள்ளிக்கிழமை காலை 'லியோ யுத் வின் 2048' மற்றும் கொழும்பு லியோ கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த 10,000 மரக் கன்றுகளை நடும் வேலைத் திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ☞2

## ஹர்ஷவை வளைக்க ஜனாதிபதி தீவிரமாக முயற்சி



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளாதார நிபுணருமான ஹர்ஷ டி சில்வா அரசுடன் இணைந்தால் அவருக்கு நிதி அமைச்சு கிடைக்கும் என்று அரச தகவல்கள் கூறுகின்றன.

அவரை வளைத்துப் போடும் முயற்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைவிடவில்லை என்றும், தொடர்ந்து ☞3

### ஜனாதிபதி வாக்குறுதியை மீறியதால்

# அடுத்த வாரம் முதல் மீண்டும் போராட்டம்

## தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமக்கு அளித்த வாக்குறுதியை மீறியுள்ளதால் இந்த ஆட்சியின் வரிக்கொள்கைக்கு எதிராக அடுத்தவாரம்முதல்மீண்டும் தொழிற்சங்கநடவடிக்கையை தீவிரப்படுத்தவுள்ளதாக தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது,

இந்தக் கூட்டமைப்பின் விசேட கலந்துரையாடல் வெள்ளிக்கிழமைகொழும்பில் இடம்பெற்றது. அதில் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்வதற்கான ☞3

## உறவுகள் அருந்தப்பு



வவுனியாவில்வெள்ளிக்கிழமை வீசிய மினி சூறாவளியால், காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்ட கொட்டகை மீது மரம் முறிந்து வீழ்ந்தது. அதிலிருந்தவர்கள் நூலிழையில் தப்பினர்.

ஏ9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக 2ஆயிரம்நாட்களுக்கும் மேலாகத் தொடரும் உறவுகளின் போராட்டக் கொட்டகைக்குள் சூறாவளி நேரத்தில் பலர் இருந்தனர். அவர்கள் அமர்ந்திருந்த கொட் டகைக்கு மேலே திடீரென அருகில் ☞2

# சுயாட்சி இன்னும் கிடைக்கப்பெறாத பகுதியாக ஈழத்தை அங்கீகரியுங்கள்

## ஐ.நாவில் கஜேந்திரகுமார் கோரிக்கை



தமிழர் தேசத்தினை, சுய ஆட்சி இன்னமும் கிடைக்கப்பெறாத பகுதியாக அங்கீகரிக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வலியுறுத்தியுள்ளார் என்று அந்தக்கட்சிவியாழக்கிழமை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் ஐநா மனித உரிமை பேரவையின் 52 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்றுள்ள அவர், 'ஆயுத மோதல் முடிவுற்று 13ஆண்டுகளின் பின்னரும் தொடரும் இலங்கை அரசின் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு' எனும் தலைப்பில் அங்கு ☞2

## அநாதரவாக்கப்பட்டுள்ள 10,000 நாட்டாமைகள்



கொழும்புக்குப்பொருட்களைக் கொள்வனவு செய்ய வருபவர்கள் இல்லாததால் சுமார்10 ஆயிரம்நாட்டாமை மக்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்று நாட்டாமைசங்கத்தின் தலைவர் அனுருத்த ☞3

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை என்பது தெளிவாகின்றது.

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று - நாட்டை ஆட்டிப் படைத்து, பெரும் யுத்தமென்னும்இரத்தஆற்றுக்குள் மூழ்கடித்த தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு முயற்சியாக முன்வைக்கப்பட்டதுதான் மாகாண சபை எனும் அதிகாரப் பகிர்வு முறைமை. அதன் மூலம் மாகாணங்கள் தோறும் தெரிவாகும் மக்கள் பிரதிநிதிகள், குறித்தொதுக்கப்பட்ட துறைகள் தொடர்பில் தத்தமது பிரதேசங்களுக்கான நியதிச் சட்டங்களை யாக்கும் அதிகாரத்தைப் பெற்றனர். மத்தியில் நிறைவேற்றதிகாரத்தை வைத்திருக்கும் ஜனாதிபதி, தமது பிரதிநிதியான ஆளுநர் மூலம் அந்த நியதிச் சட்டவாக்கல் அதிகாரத்தை எதேச்சாதிகாரமாகப் பிடுங்குவது என்பது மாகாண சபை ஆட்சி முறைமைக்கே ஆப்பு வைக்கும் அடாத்துச் செயலாகும்.

இப்படி ஒரு நடவடிக்கையை வடக்கு ஆளுநர் தம்மிஷ்டப்படி மேற்கொண்டுள்ளார் என்பதை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா அமைச்சரவையில் விசனத்துடன் முதலில்சுட்டிக்காட்டியபோதே, "அவருக்கு (ஆளுநருக்கு) அந்த அதிகாரத்தை யாராம் கொடுத்தார்கள்?" என்று புதிய ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க ஏளனத்துடன் கேட்டிருந்தார். அதனை அப்போதே (சில மாதங்களுக்கு முன்னர்) இப்பத்தியில் குறிப்பிட்டும் இருந்தோம்.

ஆக, இப்படித்தான்தோன்றித்தனமாக - தம்மிஷ்டப்படி - நியதிச் சட்டத்தை யாக்கும் நடவடிக்கையைவடக்குஆளுநரே சுயேச்சையாக எடுத்து இருக்கின்றார்என்பதுதெளிவு.

அதுவும்தமிழரானஅவர், தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வின் ஒரு கட்ட முயற்சியான - அதிகாரப் பரவலுக்கு வழி செய்கின்ற - மாகாண சபை மூலமான அதிகாரப் பகிர்வு முறைமைக்கே ஆப்படிக்கும் விதத்தில்இத்தகைய அதிகாரத் துஷ்பிரயோகநடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்.

அதுவும் இலங்கையில் மாகாண சபைகளின் 35 வருட கால வரலாற்றில் முன்னர் இதுவரை ஒன்பது மாகாணங்களிலும் பதவிகளில் இருந்த எந்த ஆளுநருமே செய்யவே செய்யாத முட்டாள்தனமான சட்ட நடவடிக்கையை, சட்டமா அதிபரின் ஆலோசனை கூடப் பெறாமல் அவர் செய்திருக்கின்றார்.

இப்படி ஆளுநர் சட்டவாக்கல்நடவடிக்கையைமுன்னெடுப்பது தவறு என ஆரம்பத்தில் சுட்டிக் காட்டப்பட்ட போது, ஏதோ அதிகம் தெரிந்த சட்ட மேதாவி போல தம்மைக் காட்டிக் கொண்டு, தமது அந்த செயலை நியாயப்படுத்தும் அறிக்கை ஒன்றை ஆளுநர் அவரது அலுவலகம் மூலம் வெளியிட்டமையும் மறைக்க - மறக்க - கூடியது அல்ல.

நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றமுடிவின்பின்னரும், அந்த ஆளுநர் பதவியில் நீடிப்பதும், அவரை ஜனாதிபதி வடக்கில்தமது ஆட்சிப்பிரதிநிதியாக வைத்திருப்பதும் தார்மீக ரீதியில் முறையற்றவை. ஒன்றில் அவராகப் பதவி விலக வேண்டும். அல்லது அவரது இடத்துக்கு புதியவர் ஒருவரை ஜனாதிபதி நியமிக்க வேண்டும்.

ஆனால், இலங்கை போன்ற நாட்டில் அப்படியான முன்மாதிரியாக நடப்பது துர்லபமே. இங்கு அதிகாரத்துக்கு வருவோருக்கும் இருப்போருக்கும் அத்தகைய அரசியல் உயர் நாகரிகம் - பண்பியல்பு - கிடையவே கிடையாது. ஆகவே அவரும் தாமாகப் பதவி விலக மாட்டார் இவரும் அவரைப் பதவி விலக்கமாட்டார். அதுநிச்சயம்.

அடுத்த விடயம் - அதிகார பகிர்வு விவகாரம் குறித் தும், 13ஆம் திருத்தம், மாகாண சபை முறைமைகள் போன்றவை குறித்தும் எப்போதும் - இப்போதும் கூட - துள்ளிக்குதித்துக் கருத்துக்களை அள்ளி வீசி, அதில்அரசியல்நடத்தும்நமது தமிழர் தரப்புகள் பலவும், மாகாண சபை முறைமையையே சீரழிக்கும் வடக்கு ஆளுநரின் இத்தகைய மோசமான அதிகாரத் துஷ்பிரயோக மீறலைக்கண்டுகொள்ளாமல் அல்லது அது குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளாமல் அடக்கி வாசித்தமை ஆச்சரியத்திற்குரியது.

இப்படி வடக்கு ஆளுநர் நியதிச் சட்டங்களை யாத்து, வர்த்தமானியில் அறிவித்து, அதிகார வரம்பை மீறி தவறிழைத்து, அதைப் பிழையான முன்னுதாரணமாக்கியுள்ளார் என்பதை காலைக் கதிரே முதலில் வெளிச் சத்துக்குக் கொண்டு வந்தது. பரபரப்பாக அச்செய்தி வெளியானதும் வழமை போல ஓரிரு அறிக்கைகள், கண்டனங்களுடன் அடங்கிப்போய்விட்டனர் நம்தலைவர்கள்.

சில சமயம் ஆளுநரின் இந்த மோசமான முன்னுதாரண அத்துமீறலின் விளைவுகள், ஆபத்தான பாதிப்புகள், அதன் ஆழ அகலங்கள் போன்றவை சட்டம் குறித்து அதிகம் அறிந்திராத நமது தலைவர்களுக்கு விளங்கியிருக்கவில்லையோ என்னவோ..!

மூவர் மட்டுமே இந்த நடவடிக்கையின் மோசமான விளைவுகளை உணர்ந்து, காத்திரமான - தொடர்ச்சியான-சிலநடவடிக்கைகளைச் சிரத்தையுடன் முன்னெடுத்தனர்.

ஒருவர் - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. அமைச்சரவை மட்டத்திலும் ஆளுநரின் நடவடிக்கைக்கு எதிராகக் கடுப்புடன் குரல் எழுப்பியவர் அவர்.

மற்றைய இருவர் - வடக்கு மாகாண அவைத் தலைவர்சி.வி.கே. சிவஞானம் மற்றும் தமிழரசு எம்.பியான எம்.ஏ.சுமந்திரன்.

பகிரங்க அறிக்கைகள், அறிவிப்புக்கள், செவ்விகள் மற்றும் நாடாளுமன்றப் பேச்சுக்கள் மூலம் வடக்கு ஆளுநரின் அத்துமீறலை அம்பலப்படுத்தியமையோடு, நீதிமன்றத்தை நாடி, அதன் மூலம் அந்த அத்துமீறலுக்கு அடியோடு - நிரந்தரமாக - 'செக்' வைக்கவும் அவர்கள் இருவருமே நடவடிக்கை எடுத்தனர்.

இதில் இன்னொரு வேடிக்கை விவகாரமும் உண்டு. மாகாண சபையின் அதிகாரங்கள் குறித்து அதிகம் தெரிந்தவர் - தெரிந்திருக்க வேண்டியவர் - நீதியரசர் விக்னேஸ்வரன்தான். வடக்கு மாகாண முதல்வராக இருந்த அவருக்குத்தான் வடக்கு ஆளுநரின் இந்த சட்டமாக்கும் நடவடிக்கை நிரந்தர வழமையானால் - முன்னுதாரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் -மாகாணசபைமூலமானஅதிகாரப் பகிர்வு முறைமைக்கே அது நிரந்தர ஆப்பாகிவிடும் என்பது நன்கு புரிந்திருக்க வேண்டும். அத்தோடு அவர் சட்டப்புலமைமிக்க சட்டவாதி. உயர்நீதிமன்றத்தில் நீதியரசராக அத்துறையில் கோலோச்சியவர். ஆகவே அவருக்கே இவ்விடயம் அத்துப்படியாகப் புரிந்திருக்க வேண்டும்.

ஆனால், அவரோ வடக்கு ஆளுநரின் இந்தத் தவறைக் கண்டிக்கவும் இல்லை, ஆட்சேபிக்கவும் இல்லை. மாறாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இந்த ஆளுநரையே வடக்குக்குத் தொடருங்கள் என்று நேரடியாகப்பரிந்துரைத்து, வலியுறுத்தி, அவரது (ஆளுநரது) பதவி நிலையை உறுதிப்படுத்தினார் என்றும் உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

ஆக, தமிழ் மக்களுக்கு தம்மத்தியில் இருக்கும் தற்குறிகள் - கோடரிக்காம்புகள் - யார் என்பது இப்போதாவது புரிய ஆரம்பித்திருக்கும் என்று நம்பலாம்.

- மின்னல் -

## இந்துக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது:

இந்நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பை அழிக்கும் செயற்பாட்டை முன்னெடுத்து வருவது தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான ஆட்சியே ஆகும். இந்நேரத்தில் நமது நாட்டு மக்களின் அடிப்படை உரிமையான சர்வஜன வாக்குரிமையைச் சீர்குலைத்து உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்குப் பல சதித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தி நீதிமன்றத்தின் உதவியை நாடியபோது, உயர் நீதிமன்றம் அதைப்பரிசீலித்து இடைக்கால உத்தரவைப் பிறப்பித்து தேர்தலுக்கு ஒதுக்கப்படும் பணத்தைத் தேர்தல் பணிகளுக்கு பயன்படுத்தவேண்டும் எனக் கூறியிருந்தாலும், அரசு தனக்கு விசுவாசமான இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினையை முன்னிலைப்படுத்தி இந்த முடிவைச் சவாலுக்குட்படுத்தியது.

இதன் காரணமாக ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நீதித்துறை, சட்டவாக்கத்துக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் இடையில் பெரும் நெருக்கடி நிலை உருவாகியது.

சட்டவாக்கம் நெருக்கடியை ஏற்படுத்தி நாட்டின் ஜனநாயகத்தை அழிக்க ஜனாதிபதி தலைமையிலான அரசு கடுமையாக முயற்சிக்கின்றது. இந்த முயற்சிகளை மிகவும் வெறுப்புடன் கண்டிக்கின் றேன்.

நீதித்துறை உறுப்பினர்கள் அனைவரினதும் கண்ணியமான இருப்புக்காக எதிர்க்கட்சியினராக நாம் முன்னிற்கின்றோம்.

நிறைவேற்று அதிகாரம் மற்றும் நாடாளுமன்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி நீதிபதிகளைச் சங்கடப்படுத்துதல், அவமதிப்புகளுக்குட்படுத்துதல், வரப்பிரசாதகுழுக்குஅழைத்து மானபங்கப்படுத்தல் மூலம் நீதிமன்றத்துறையில் தலையீடு செய்ய அரசு ஆயத்தமாகின்றது.

ஜனநாயகத்தைப் போற்றும் ஒரு மக்கள் பிரதிநிதியாக இதை வன்மையாகக் கண்டிக்கின்றேன். இந்தச் சதிகளை முறியடிக்க இன, மத பேதமின்றி அனைவரும் கைகோர்க்கவேண்டும்.

எனவே, அனைத்து அரசியல் சதிகளையும் கைவிட்டு மக்கள் கோரும் தேர்தலை நடத்துமாறும், இல்லையெனில் சில தரப்புகள் ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபடலாம் என்பதனால், நாட்டில் இவ்வாறான பாதகமான நிலைமைகள் ஏற்படுவதற்கு முன்னர் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தைப் பாதுகாக்குமாறும் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## உறவுகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த மரம் ஒன்றின் பெரும் கிளை முறிந்து வீழ்ந்தது.

இதனால் போராட்ட கொட் டகையின் ஒரு பகுதி தகரக் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. இதனால் போராட்டக் கொட்டகை பகுதியளவில் சேதமடைந்தது. மரம் முறிந்து வீழந்தபோது கொட்டகைக்குள் 5 தாய்மார் இருந்த போதும் அவர்கள் எந்தவித பாதிப்புமின்றி நூலிழையில் தப்பினர். அவர்களது உடமைகள் சில உடைந்தும், மழையில் நனைந்தும் சேதமடைந்தன.

## வவுனியாவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காற்றின் வேகம் திடீரென அதிகரித்தமையால் நகரின் முக்கிய வீதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்தன. இதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டது. சில இடங்களில் போக்குவரத்து சிலமணிநேரம் தடைபட்டது. மாவட்ட செயலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வைத்தியசாலை, நீதிமன்றத் தொகுதி, கந்தசாமி கோவிலடி, பூந்தோட்டம், மகாறம்பைக்குளம் உள்ளிட்ட பல பகுதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

பலஇடங்களில் மரக்கிளைகள் வீடுகளுக்கு மேல் முறிந்து வீழ்ந்ததில் வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், வீட்டின் மதில்களும் சரிந்து வீழ்ந்துள்ளன.

## சுயாட்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றினார் என்று அந்த அறிக்கை கூறுகின்றது. அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இலங்கையில் ஆயுத மோதல் முடிவிற்கு வந்து 13 ஆண்டுகள் ஆகியிருக்கும் நிலையில், இலங்கையின் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் சிங்கள பௌத்த மயமக்கல்பெரும்வேகமெடுத்துள்ளது.

இலங்கையின் நீதிமன்ற கட்டளையினை மீறி, தமிழரின் தொன்மையான வழிபாட்டிடமான குருந்தூர் மலையானது அழிக்கப்பட்டு அங்கு ஒரு பௌத்த விகாரை கட்டப்பட்டிருக்கிறது.

இப்படியாகத் தமிழர் தாயகமெங்கிலும், குறிப்பாகச் சிங்களவர்கள், பௌத்தர்கள் இயல்பாக குடியிருக்காத பகுதிகளில்கூட, பௌத்த மத ஆலயங்கள் சிறிலங்கா அரச இயந்திரத்தின் துணையுடன் அமைக்கப்பட்டுவருகின்றன.

நாயாறு, தையிட்டி, நாவற்குழி, மாங்குளம் சந்தி, கச்சல் சமளங்குளம், கன்னியா வெந்நீரூற்று என்பன, இவ்வாறு தமிழர் தாயக நிலத்தில் பௌத்த ஆலயங்கள் அமைக்கப்பட்டுவரும் சில இடங் களாகும்.

இவற்றுள் பெரும்பாலனவை இலங்கை அரச ஆதரவோடு , தமது அரசின் நீதிமன்ற கட்டளைகளைத்தாமே மதிக்காது, உதாசீனப்படுத்தி, கட்டமைக்கப்பட்டுவரும் ஆலயங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, சில இடங்களில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த ஆலயங்களைச் சூழ இருக்கும் பகுதிகளில், தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலைத் திட்டமிட்டு மாற்றியமைக் கும் முனைப்போடு, அரச ஆதரவுடன் சிங்களக் குடியேற்ற திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு மற்றும் மாதவனை மேய்ச்சல் நிலங்களை தமிழர்கள் காலங்காலமாக 300,000க் கும் மேற்பட்ட கால்நடைகளுடன் மேய்ச்சலுக்குப் பயன்படுத்திவரும் நிலையில், நீதிமன்ற உத்தரவை மீறி, அங்கு சட்டவிரோதமான முறையில் சிறிலங்கா அரச ஆதரவோடு சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவரும் சிங்களவர்களால், தமிழர்கள் மேய்ச்சல் நிலங்களில் இருந்து துரத்தப்படுகின்றனர்.

உண்மையில் இந்த தமிழர்களின் பாரம்பரிய - புராதன அடையாள நிலமானது, சிங்கள பௌத்தமயமாக்கலுக்கான பகுதியாக சிறிலங்கா அரசினால் குறிவைக்கப்பட்டு, அங்கு இனப்பரம்பல் மாற்றப்பட்டு வருகிறது .

'மாதுரு ஓயா வலதுகரை அபிவிருத்தி திட்டம்' எனும் பெயரில் நடைமுறைப்படுத்தப்படும் இந்தத் திட்டமானது. அந்தப் பகுதியில் இருக்கும் தமிழர்கள் இனச்சுத்திகரிப்பு செய்து, சிங்களவர்களை குடியேற்றி இனப்பரம்பலை மாற்றவே சிறிலங்கா அரசினால் பயன்படுத்தப்படுகிறது.

புராதன தமிழ் சைவ வழிப்பாட்டிடமான வெடுக்குநாறி மலையினை பௌத்த புராதன பிரதேசமாக மாற்றியமைத்து பிரகடனப்படுத்தும் நோக்குடன், அப்பகுதியை சிறிலங்கா அரசின் தொல்பொருட் திணைக்களம் கையகப்படுத்தியிருக்கிறது.

ஆயுத மோதல் முடிவிற்று 13 ஆண்டுகள் கடந்த நிலையிலும், நடைமுறையில் - தமிழர்கள் மீது, இலங்கை அரசினால்திட்டமிட்டுகட்டமைக்கப்பட்ட கலா சார இனவழிப்பும்முனைப்புடன்கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது என்பதை உங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, இலங்கைக்கு ஐ.நா.வின் சிறப்பு தூதுவர் ஒருவரை நியமிக்குமாறும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு பாரிந்துரைக்குமாறும், தமிழர் தேசமானஈழத்தினை,சுயஆட்சி இன்னமும் கிடைக்கப்பெறாத பகுதியாக அங்கீகரிக்குமாறும், இந்த அவையின் அங்கத்துவ நாடுக ளிடம் கோருகிறோம் - என்றார்.

## திறைசேரியின் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக உயர் நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை உத்தரவு நாடாளுமன்றத்தின் சிறப்புரிமையை மீறுவதாக அரச தரப்பினர் முறையிட்டிருந்த நிலையில் பதில் நடவடிக்கையாக எதிரணியினர் இந்தநகர்வை மேற்கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற வளாகத்தில் வெள்ளிக்கிழமை ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, திறைசேரிச்செயலர் சிறப்புரிமையை மீறியுள்ளார் என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஒருமித்து குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கருத்து வெளியிடுகையில், ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் இந்த நாட்டில் உள்ள மக்களின் இறைமையையும் வாக்குரிமையையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அந்த வகை யில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கு நாடாளுமன்றத்தினால் அனுமதிவழங்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விடுவிக்காமையானது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் விடயமாகும். ஆகவே அதனை குறிப்பிட்டு சிறப்புரிமை விடயமொன்றை சபாநாயகரிடத்தில் கையளித்துள்ளேன்.

ஏற்கனவே, திறைசேரிச் செயலாளர் உயர் நீதிமன்ற உத்தரவினை மீறியுள்ளமைக்கு எதிராக வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளோம் - என்றார்.

## ஹரின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருந்தார் என்றும், அந்தத் தொடர்பின் ஊடாகவே அவர் அரசுடன் இணைந்தார் என்றும் முஜிபுர் ரஹ்மான் பொதுக்கூட்டம் ஒன்றில் கூறியிருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் கூட்டம் இடம்பெறும் போதெல்லாம் ஹரின்பெர்னாண்டோவுக்குத் தொலைபேசி அழைப்புகள் வரும். அவர் கூட்டத்தின் நடுவே எழுந்து வெளியே சென்று பேசிவிட்டு வருவார். அப்படி கோல் எடுத்தவர் நாமல்ராஜபக்ச என்று முஜிபுர் ரஹ்மான் தெரிவித்திருந்தார்.

இதைமறுத்துள்ளஹரின் பெர்னாண்டோ, அந்தக் காலப்பகுதியில் எனக்கு வந்த தொலைபேசி அழைப்புகளின் விபரத்தைத் தருகின்றேன். அதில் நாமல் கோல் எடுத்த விபரம் இருக்கின்றதா என்று சோதித்துப் பார்க்கவும். இதில் முஜிபுர் ரஹ்மான் தோல்வியடைந்தால் உடனடியாக அவர் தேர்தல் போட்டியில் இருந்து விலக வேண்டும் என்று கூறியுள்ளார்.

## ஆளுநர் ஜீவன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்துமூலம்அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்திருந்தார். அதனடிப்படையில்தான் அந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்த மாட்டேன் என்று ஆளுநர் உறுதியளித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் கருத்துத்தெரிவவித்தவராசா தெரி வித்ததாவது -

அரசமைப்பின் 13 ஆம் திருத்தச் சட்டத்தை அறிந்து கொள்ளாமல் ஆளுநராகப் பதவியேற்றிருந்தாலும் அதன் பின்பாவது ஜீவன் தியாகராஜா அதனை அறிந்திருக்கவேண்டும். அல்லது அதில் நிபுணத்துவம் மிக்கவர்களின் ஆலோசனையை ஏற்றிருக்கவேண்டும். மாறாக இப்படி நீதிமன்றம் சென்று மூக்குடைபட்ட பின்பும் அந்தப் பதவிக்கு ஆசைப்படக்கூடாது. உண்மையில் எப்போது அரசமைப்பை மீறி அவர் நடந்துகொண்டார் என்பது உறுதிப்படுத்தப்பட்டதோ அப்போதே அவர் அந்தப் பதவியில் இருந்து விலகியிருக்கவேண்டும்.

இருப்பினும் அதனை தற்போதைய ஆளுநரிடம் இருந்து அறவே எதிர்பாரக்க முடியாது ஏனெனில் அவருக்கு சட்டமும் தெரியாது, நிர்வாகமும் தெரியாது, ஜனநாயகமும்தெரியாது - என்றார்.

## அனைவரும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் கொழும்பிலுள்ள பிரதான பாடசாலைகள் பலவற்றுக்கும் மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

நிகழ்வில் உரையாற்றிய சாகல ரத்னநாயக்க மேலும் தெரிவித்ததாவது:

நீண்ட காலத்திற்கு பின்னரே இந்த மேடைக்கு வந்திருந்தாலும், பழைய நிகழ்வுகள் பல இன்றும் நினைவில் நிற்கின்றன. இந்த மேடையில் எத்தனை தடவைகள் ஏறியிருப்பேன் என்பது நினைவில்லாவிட்டாலும் மாணவத் தலைவராக வும் சிரேஷ்ட மாணவத் தலைவராகவும் இங்கு இடம்பெற்ற கல்விசார செயற்பாட்டு மூலம் பல்வேறு அனுபவங்களை பெற்றுக்கொண்டேன்.

அதுவே எனது அரசியல் செயற்பாடுகளிலும் பெரும் பலமாக அமைந்திருந்திருக்கிறது. அத்தோடு இவை ஆளுமைத் திறனையும் தந்தது. அதேபோல் மாணவத் தலைவர்களாக வரும் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளில் சிறந்த முறையில் முன்னெடுப்பதுடன் நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளவும் முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

ரோயல் கல்லூரி மாணவர்களுக்கு கடந்த சில நாட்கள் மிகச் சிறப்பான நாட்களாக அமைந்திருந்தன. ரோயல் மற்றும் புனித தோமஸ் அணிகளுக்கிடையிலான சமரில் வெற்றி கிட்டியது. ஒரு தேசம் என்ற வகையில் நமது நாடு இனியும் வங்குரோத்து நிலையில் உள்ள நாடு அல்ல என்ற நற்செய்தியும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நமக்கு கிடைக்கப்பெற்றது.

சர்வதேச நாணய நிதிய நிறைவேற்றுக் குழுவின் நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் கிடைக்கப்பெற்றதை இலங்கையின் வேலைத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவே பலரும் காண்கின்றனர். ஆனால் மிகையான சலுகைகளுடன் நீண்ட காலத்திற்குள் செலுத்தி முடிக்க வேண்டிய கடனாகவே இதனை நாம் காண்கிறோம். இது மிகவும் சவாலான ஒரு வேலைத் திட்டம் என்ற வகையில் சர்வதேச சமூகம் எமக்கு வழங்கியுள்ள அங்கீகாரத்திற்கு நாம் மதிப்பளிக்கவேண்டும்.

பல நாடுகள் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளபோதும் இந்த இலக்கை அடையும் இயலுமை அவர்களுக்குக் கிட்டவில்லை. கொவிட் போன்ற பல சவால்களை நம்மைப் போன்ற பல நாடுகள் எதிர்கொண்ட போதும் அந்த நிலையிலிருந்து நாம் துரிதமாக மீண்டெழுந்துள்ளோம். இருப்பினும் நாம் இந்த பயணத்தில் நெடுந்தூரம் செல்ல வேண்டியுள்ளது.

அதற்கமைய இலங்கைக்கு வருகின்ற முதலீட்டாளர்கள் இலகுவான முறையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு உகந்த வகையில் நமது பொருளாதார வரைவுகளை வடிவமைக்க வேண்டியது அவசியமாகிறது. அதற்காக நாம் முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும்.

முதலீடுகளை ஊக்குவிப்பதன் ஊடாகவே நாட்டை அபிவிருத்தி பாதையில் இட்டுச் செல்ல முடியும். நாளைய சந்ததியினருக்கான வளமான எதிர்காலத்தையும் தோற்றுவிக்க முடியும். உங்களது வளமான எதிர்காலத்திற்கு அத்திவாரம் இடும் நோக்கிலேயே நாம் இப்பணிகளைச் செய்கிறோம்.

இது தொடர்பான புரிதலுடன் கூடிய உங்களது பங்களிப்பு எமக்கு அவசியமாகும். அந்த வகையில் கொழும்பு ரோயல் கல்லூரியின் லியோ

(03ஆம் பக்கம் பார்க்க)







காலைக்கதிர் Kalaikkathir

## அனைவரும் ...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி) கழகத்தினரால் முன்னெடுக்கப்படும் 10,000 மரக் கன்றுகளை நாட்டும் வேலைத்திட்டத்தில் பங்கெடுக்க கிடைத்தமையையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு இவ்வாறானதொரு திட்டத்தை முன்னெடுத்தமைக்கு நன்றிகள்.

காலநிலை பேரிடர்கள் எதிர்காலத்தில் முக்கிய சவாலாக விளங்கக்கூடும் என்ற வகையில் இது தொடர்பாக அவதானம் செலுத்த நாம் தவறினாலும் அதிலிருந்து மீள்வதற்கான திடமான முயற்சிகளை மேற்கொள்ளத் தவறினாலும் எமது மீள் எழுச்சியும் பொருளாதார வளர்ச்சியும் தற்காலிகமானதாக மாத்திரமே அமைந்து விடும்.

அதனால் காலநிலைப் பேரரிடரை முகாமைத்துவம் செய்துகொள்வது பொருளாதார வளர்ச்சிக்கு செய்யும் பங்களிப்பாக அமையும். பேரிடர்களை முகாமைத்துவம் செய்து கொள்ளும் நோக்கில் அர்ப்பணிப்புடன் செயற்படும் பலரும் இவ் உலகில் உள்ள நிலையில் அவர்களுக்கான ஊக்குவிப்புக்கள் மற்றும் நிதி வழங்கள் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன என்றார்.

## “நீதியரசர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பங்கேற்றவர்கள், நீதிமன்றத்தின் சுயாதீனத்தை உறுதிப்படுத்து, ஜனநாயக தூண்களை மோதலுக்கு உள்ளாக்காதே, நீதியரர்களுக்கும் சிறப்புரிமைகள் காணப்படுகின்றன உள்ளிட்ட பல்வேறு முழக்கங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு போரட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்த சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைக்குழுவைக்கூட்டி பிரேம்நாத் சி தொலவத்தவை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். அவருடைய கருத்துக்களைப் மையப்படுத்தி இந்த விடயத்தினை முன்கொண்டு சென்று நீதிபதிகளை சிறப்புரிமைக்குழுவின் முன்னாள் அழைப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்.

பிரேம்நாத் சி தொலவத்தவும், ஹொான் சேமசிங்கவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். ஆகவே ரணில் விக்கிரமசிங்கவின் குரல்தான் அவர்கள் மூலம் நாடாளுமன்றத்தில் ஒலித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேர்தலை நடத்துவதில் விருப்பமில்லை. ஆகவேதான் அவர் பல்வேறு நடவடிக்கைளை முன்னெடுக்கின்றார். அதிலொன்றுதான் சிறப்புரிமை விவகாரம். இந்தச் செயற்பாடானது ஜனாதிபதி ரணில் நேரடியாக நீதித்துறையின் மீது கைவைப்பதாகவே உள்ளது - என்றார்.

## அடுத்த வாரம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தீர்மானம் எடுக்கப்பட்டது.

கலந்துரையாடல் தொடர்பில் கருத்து வெளியிட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் செயலாளருடனான கடந்த வார சந்திப்பின்போது மார்ச் 22ஆம் திகதி எம்முடன் ஜனாதிபதி பேச்சு நடத்துவார் என்று உறுதி அளிக்கப்பட்டது. இதனால்தான் எமது தொழிற்சங்க நடவடிக்கையை நாம் தற்காலிகமாக நிறுத்தினோம். இருப்பினும் இதுவரையில் ஜனாதிபதியின் தரப்பிலிருந்து எந்வொரு அதிகாரியும் எம்மை தொடர்பு கொள்ளவில்லை. எமது தொலைபேசி அழைப்புக்களுக்குக்கூட அதிகாரிகள் பதிலளிக்கவில்லை.

ஆட்சியாளர்கள் தவறிழைக்கப் போகிறார்கள் போல்தான் தெரிகின்றது. இந்த நிலையில்தான் நாம் மீண்டும் ஒன்றுகூடி தொழிற்சங்க நடவடிக்கையை அடுத்த வாரம் முதல் தீவிரப்படுத்துவதென தீர்மானித்துள்ளோம் - என்றார்.

## ஹர்ஷவை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தீவிரமாக முயற்சி செய்து வருகின்றார் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

அந்தத் தகவலின்படி, ரணிலுக்குத் தேவைப்பட்டது ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து மூவர். ஹரின் பெர்னாண்டோ, மனு நாணயக்கார, ஹர்ஷ டி சில்வா ஆகிய மூவரே. மனு, ஹரின் ஆகியோர் ஏற்கனவே அரசுடன் இணைந்துவிடட்டார்கள். ஹர்வை அரசுடன் இணையுமாறு ரணில் பல தடவைகள் பேசிவிட்டார். நிதி அமைச்சு தருவதாக வாக்குறுதியும் வழங்கியுள்ளார். ஆனால், ஹர் விரும்புவதோ தனித்துச் செல்லாமல் கட்சியுடன் போய்ச் சேர்வதுதான்.

தொடக்கத்தில் ஹர்வை ஜனாதிபதியாக்குவோம் என்ற கூற்றை முன்வைத்தவர் ஹரின். அரசுடன் இணையும் முன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் பல தடவைகள் பேசினார் ஹரின். குறைந்தது கட்சியில் இருந்து 5 பேரையாவது அரசுடன் சேர்ப்போம். இந்தப் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுவோம் என்றார் ஹரின். ஆனால், ஹரினின் எந்த கதையையும் சஜித் கேட்கவில்லை. இதனால் மனுவையும் இணைத்துக்கொண்டு அரசுடன் சேர்ந்தார் ஹரின்.

இப்போது ஹரின், ஹர்ஷவையும் அரசுடன் சேர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார் என்று அறியமுடிகின்றது.

## அநாதரவாக்க ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொத்தலாவல தெரிவித்தார்.


இதனால் சில நாட்டாமைகள் வாழ்க்கையில் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

கடந்த இரண்டு வருடங்களில் கொரோனாத் தொற்றின் போது, எந்த வேலையும் அவர்கள் செய்யவில்லை. அவர்கள் மிகவும் உதவியற்றவர்களாகவும் இருந்தனர்.

கொழும்பில் 4 ஆயிரம் நாட்டாமைகளும், பேலியகொடையில் 6 ஆயிரம் நாட்டாமைகளும் இருக்கின்றனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை - என்று நாட்டாமை சங்கத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.


விளம்பரத் தொடர்புகளுக்கு – தொலைபேசி இலக்கம் 076 443 8622









# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலங்கையின் விதியை மாற்றமுடியாது

பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் (ஐஎம்எவ்) கடன் உதவி கிடைத்துவிட்டதால் நாடு முறிந்துவிட்டது என்கிற நிலை இனிக் கிடையாது என்று அறிவித்த அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நிதியத்துடனான உடன்படிக்கையை அடுத்த நான்கு ஆண்டுகளில் செயற்படுத்தி நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க அனைத்துத் தரப்பினரும் குறிப்பாக எதிர்க் கட்சியினர் ஒத்துழைக்கவேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

செலாவணி நிதியத்தின் உடன்படிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைத்து அவர் ஆற்றிய உரையில் ரணில் இந்தக் கோரிக்கையை முன்வைத்தைத் தொடர்ந்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளாதார வல்லுநருமான ஹர் டி சில்வா, இணங்கக்கூடிய விடயத்தில் இணங்கிச் செல்வோம் அதற்காக எல்லாவற்றிலும் இணங்கிச் செல்ல முடியாது என்று தெரிவித்திருந்தார். இது பொறுப்பான எதிர்க்கட்சி ஒன்றின் கூற்றாகக் கொள்ளத்தக்கது.

எதிர்க்கட்சி என்பதற்காகக் கண்ணை மூடிக்கொண்டு எல்லாவற்றையும் எதிர்ப்பதென்பது அவசியமற்றது. கட்சிகளின் நலன்களைவிட நாட்டினதும் மக்களினதும் நலன்களே பெரிது என்கிற வகையில் எதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் சிறந்த திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே சிறந்தது. தேவையானது. ஆனால், இலங்கையில் அப்படி நடப்பதில்லை. ஆட்சியில் உள்ள தரப்பு நடைமுறைப்படுத்தும் எந்தவொரு விடயத்தையும் எதிர்த் தரப்பில் இருப்பவர்கள் எதிர்ப்பதும், பின்னர் அவர்கள் ஆட்சீக்கு வந்ததும் முதலில் ஆட்சியில் இருந்தவர்கள் நடைமுறைப்படுத்திய விடயங்களை அப்படியே தூக்கிக் கடாசிவிட்டு புதிதாக ஒன்றை அறிமுகப்படுத்துவதுமே காலங் காலமாக நடக்கிறது.

இப்போதும், பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் விடயத்திலும் அதுவே நடக்கப்போகிறது. ரணில் விக்கிரமசிங்க சரி, பிழை என்பதற்கப்பால் செலாவணி நிதியத்திடம் செல்வதைத் தவிர வேறு வழி ஏதும் இல்லை என்கிற நிலையில்தான் அரசு அங்கு சென்று காலில் விழுந்தது. அப்படியிருந்தாலும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் பேசிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் கொரடாவான லக்ஸ்மன் கிரியெல்ல, “எங்களைக் கேட்டா ஒப்பந்ததிற்குப் போனீர்கள். ஒப்பந்தம் முடிந்த பின்னர் வந்து ஆதரவு கேட்டால் எப்படித் தரமுடியும்” என்கிற பாணியில் பதிலளித்திருக்கிறார்.

“எமது ஆலோசனைகளை ஏற்காது சர்வதேச நாணய நிதியத்தை நாடிவிட்டு, பின்னர் நாடாளுமன்றத்துக்கு வந்து எமது ஆதரவினை கோரவதில் நியாயம் இல்லை. அதனை நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. மக்களின் ஆணையைப் பெற்றா சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டீர்கள்? ஆட்சியயாளர்கள் கண்ணிவெடி மீது கை வைத்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தில் நிபந்தனையில் இலங்கை மத்திய வங்கியை சுயாதீனப்படுத்துமாறு கூறப்பட்டுள்ளது. அந்த நிபந்தனையை ஏற்றுக்கொள்வதானது நரிக்கு கோழியை வழங்குவதற்கு சமமானது” என்று கடுமையாக விமர்சித்தார்.

கட்சியின் கொரடா பதவி என்பது நாடாளுமன்றத்தில் கட்சியின் தலைமைப் பதவியைப் போன்றது. எனவே லக்ஸமன் கிரியெல்லவின் கருத்தை ஒரு தனிநபர் கருத்தாக ஒதுக்கிவிட்டுப் போய்விட முடியாது. இந்த விடயத்தில் எதிர்க் கட்சியான ஐக் கிய மக்கள் சக்தி எப்படி நடந்துகொள்ளும் என்பதற்கான வெளிப்படுத்துகையாகத்தான் பார்க்கவேண்டும்.

செலாவணி நிதியத்துடனான ஒப்பந்தம் நாட்டுக்குப் பாதகமானது என்கிற வையில் நாட்டு மக்களிடம் செல்வதற்கு அந்தக் கட்சி தயாராகிவிட்டது என்பதையே அவரது கூற்றுப் புலப்படுத்துகின்றது. இதுபோன்றே 2015 ரணில் விக்கிரமசிங்க செலாவணி நிதியத்திடம் சென்றபோது ராஜபக்சக்கள் அதனைத் தவறு என்று தெரிவித்து நாட்டைப் போட்டுடைத்தார்கள். அதன் விளைவாக முறிந்துபோன நிலையை நாடு அடைந்தது. இப்போது எதிர்கட்சி வரிசையில் இருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி அன்று ரணில் பக்கத்தில் இருந்தது. ஆனால் இன்று ஏதிர்க்கட்சி என்பதால் அதனை எதிர்க்கிறது.

இந்த அரசியல் விளையாட்டு என்றானாலும் மாறப்போவதில்லை. இலங்கையின் தலைவிதி அது. மாற்றமுடியாது. அனுபவித்துத்தான் ஆகவேண்டும். ஆனால் அத்தகைய அணுகுமுறையின் மூலம் இந்த நாட்டை ஒருபோதும் முழுமையாக மீட்டெடுத்துவிட முடியாது.

# டெலிகொம் நிறுவனத்தின் அரச பங்குகளை சுபாஸ்கரன் அல்லிராஜாவிற்கு வழங்க முடிவு

## விமல் வீரவன்ஸ கூறுகிறார்



இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் அரச பங்குகளை சுபாஸ்கரன் அல்லிராஜா வுக்கு வழங்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

நாட்டின் பொருளாதாரம், தேசியபாதுகாப்புஆகியவற்றை வெளிநாட்டு நிறுவனங்கள் நிர்வகிக்கும் நிலைமை தோற்றம்பெறும்எனதேசியசுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதிய ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதியின் விசேட உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டதை அரசாங்கம் பெருமையாகக் கொள்கிறது, அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் பட்டாசு வெடித்துகொண்டாடுகிறார்கள். கடன் பெற்றதை கொண்டாட வேண்டுமாயின் சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் இருந்து கொண்டாட வேண்டும்.

பொருளாதார மீட்சியின் தந்தையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆளும் தரப்பினர் கருதுகிறார்கள். ஆனால் நல்லாட்சி அரசாங்கமே சர்வதேச பிணைமுறிகள் சந்தையில் 76 சதவீத அடிப்படையில் 36 சதவீத கடனைபெற்றுபொருளாதாரப் பாதிப்பை தீவிரப்படுத்தியது என்பதை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் மறந்துவிட்டார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தின் பொருளாதார பாதிப்பு என்ற நோயை உருவாக்கிய ரணில் விக்கிரமசிங்க தற்போது அந்த நோயைக் குணப்படுத்தும் மருத்துவரை போல் செயற்பட்டு அரசியல் நாடகத்தை அரங்கேற்றுகிறார். இதனை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

பொருளாதாரப் பாதிப்பை தீவிரமடையும் வழிமுறைகளை ஏற்படுத்தி விட்டு அது எரிமலை போல் வெடித்ததன் பின்னர் 2021 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றார்.

பொருளாதாரப் பாதிப்பு அரசியல்மாற்றத்தைஏற்படுத்தியதன் பின்னர் கோட்டா கோ கம பாதுகாக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஆசுமாரசிங்கவே கோட்டாகோ கமவில் முதலாவது கூடாரத்தை அமைத்து அரசியல் பிரசாரங்களை முன்னெடுத்தார்.

பொருளாதார மறுசீரமைப்பு எனக் குறிப்பிட்டுக் கொண்டுஇலாபமடையும்அரச நிறுவனங்களின் பங்குகளை தனியார் மயப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

டெலிகொம் நிறுவனத்தின் பங்குகள் சுபாஸ்கரன் அல்லிராஜாவுக்கு வழங்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. நாட்டின் பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு ஆகியவற்றை வெளிநாட்டு நிறுவனங்கள் தீர்மானிக்கும் நிலை ஏற்படும். - என்றார்.

# சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கும் காலத்திற்கு முன்னர் கடன்பேண்தகு தன்மையை அடையமுடியும்

## மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் உத்தரவாதம்

கொழும்பு, மார்.25

சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கும் காலத்திற்கு முன்னர் இலங்கையால் கடன்பேண்தகு தன்மையை அடையமுடியும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால்வீரசிங்கநம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கை புதிய யுகத்துக்குள் நுழைந்துள்ளதாக நான் கருதுகின்றேன் என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிதி உதவிக்காக இலங்கை மக்களின் ஆதரவை பெறாத சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாலேயே இலங்கை புதிய யுகத்துக்குள் நுழைந்துள்ளளதாகக் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் எதிர்வரும் சில மாதங்களில்நாட்டில்நிலைமை முன்னேற்றகரமானதாக மாறாலாம் எனத் தெரிவித்துள்ள மத்திய வங்கி ஆளுநர், அவ்வாறான நிலையில்கடந்த சில மாதங்களுக்கு முன் னர் நடைமுறைக்கு வந்த கடுமையான கொள்கைகளை அரசாங்கம் தளர்த்தக்கூடும் எனவும் தெரிவித்துள்ளார்.

# அரச உழியரான வேட்பாளர்களுக்கு சம்பளம் உடனடியாகக் கிடைக்காது

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்களுக்கு சம்பளம் உடனடியாகக் கிடைக்கும் வாய்ப்புக்கள் இல்லை என்று தெரிகின்றது. இந்த விவகாரம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் பேசப்பட்டபோதும் “தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான வரையறைகள் பற்றி அரசமைப்பில் கூறப்பட்டுள்ளது. ஆகவே அந்த விடயங்களை பின்பற்ற வேண்டியது அடிப்படையாகின்றது'' என்று பிரதமர் பதிலளித்தார். ஆகவே அரச ஊழியர்களுக்கு உடனடியாகச்சம்பளம்கிடைக்கவாய்ப்பில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது

நாடாளுமன்றஉறுப்பினர்தயாசிறிஜயசேகர வெள்ளிக்கிழமைஇந்தவிவகாரத்தைத்தொடக்கிவைத்தார். “உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில்ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் போட்டியிடுகின்றார்கள். அவர்களின் நிலைமைகள் தற்போது கேள்விக்குறியாகியுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் நிச்சயமற்ற நிலைமை காணப்படுவதால்தான் இந்த நிலைமைகள் உருவாகியுள்ளன'' என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தவின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

அப்போது, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, “எமது கட்சியிலும் ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களின் நிலைமைகளும் கேள்விக்குறியாகியுள்ளது'' - என்றார்.

தொடர்ந்து ஜே.வி.பி. தலைவர் அநுரகுமரா திஸாநாயக்க, “நிறைவேற்று அதிகாரத்தின் திட்டமிட்ட நடவடிக்கையால்தான் தேர்தல் பிற்போடப்படுகின்றது. இந்த நிலைமைகளைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. அரச உழியர்களுக்கு ஆட்சியாளர்கள் வழங்கும் தீர்வு என்ன?'' என்று கேள்வி எழுப்பினார்.

அப்போது, எழுந்த, ஆளும்கட்சியின் பிரதம கொரடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, “நாங்கள் ஆட்சியாளர்கள் என்ற வகையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலைப் பிற்போடவில்லை. எமது கட்சியிலும் அரச ஊழியர்கள் இருக்கின்றார்கள். ஆகவே எமக்கும் தேர்தலிலும், அவர்களிலும் அக்கறை உள்ளது. தேர்தலுக்கான நிதி தொடர்பில் உரிய பதில் அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த விடயம் தீர்வளிக்கப்பட்டுள்ள பிரச்சினையாகும்'' என்றார்

அவரைத்தொடர்ந்து பிரதமர் தினேஷ்குணவர்த்தன, “தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான வரையறைகள் பற்றி அரசமைப்பில் கூறப்பட்டுள்ளது. ஆகவே அந்த விடயங்களை பின்பற்ற வேண்டியது அடிப்படையாகின்றது” என்றார்.

அதன் பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட, “இந்த விடயம் சம்பந்தமாக அமைச்சரவை கவனம் செலுத்தவேண்டும். தேர்தல் பிற்போடப்படுமாக இருந்தால் போட்டியிடும் அரச ஊழியர்களுக்கான ஊதியத்தை அமைச்சரவை அனுமதியைப் பெற்று வழங்க வேண்டும்'' என்றார்.

தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்கள் சம்பளம் அற்ற விடுமுறை பெறவேண்டும் என்ற சட்டத்தின்படி 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் சம்பளம் அற்ற விடுமுறை பெற்றுள்ளனர். தேர்தல் நடதப்படாமல் இருப்பதன் காரணமாக அவர்களின் விடுமுறையும் முடிவற்று நீள்கிறது.

தேர்தல் நடத்தப்படும் வரைவில் அவர்களுக்கு அடப்படைச்சம்பளத்தையாவது வழங்கலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அரசுக்கு பரிந்துரைத்தது. ஆனால் அதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

# அடுத்த அமர்வில் நாடாளுமன்றில் பயங்கரவாத சட்டமூலம்

புதிய பயங்கரவாத தடைச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வின்போது சபையில் சமர்ப்பிக்க முடியும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்எழுப்பியகேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத், தெரிவித்தார்.

ரவூப்ஹக்கீம்தனதுகேள்வியில், புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் வர்த்தமானிப் படுத்தப்பட்டிருக்கிறது. அதனை எப்போது நாடாளுமன்றத்தில் முன்வைக்க ஆட்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர் என்று கேள்வியைத் தொடுத்தார்.

அதற்கு அமைச்சர் சுசில், அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது சபையில் சமர்ப்பிக்க முடியும்எனத்தெரிவித்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு பதிலாக கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டமூலம் வியாழக்கி ழமை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நீதி, அரசமைப்பு மறுசீரமைப்புமற்றும்சிறைச்சாலைகள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு இணங்க புதியசட்டமூலம்தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை காலமும் பயங்கரவாததடைச்சட்டம்என்ற பெயரில்நடைமுறையில்இருந்த சட்டத்தில்திருத்தம்கொண்டுவந்து அதனை தேசிய பாதுகாப்புச் சட்டமாக கொண்டு வருவதற்கு அரசு தீர் மானித்தது.

அது தொடர்பில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஏற்கனவே நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்தியுள்ளார். அதற்கிணங்க புதிய சட்டமூலத்தை தயாரிப்பதற்காக விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ள நிலையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

# இரு உணவகங்களுக்கு யாழ்ப்பாணத்தில் சீல்

யாழ்ப்பாணத்தில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய இரு உணவகங்களுக்கு ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், உணவகத்தைச் சீரமைக்கும் வரையில் உணவகத்துக்கு சீல்வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை காலாவதியான பொருளை விற்பனை செய்த வர்த்தகர் ஒருவருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் பொதுசுகாதார பரிசோதகரின் திடீர் பரிசோதனை நடவடிக்கையின் போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியஇருஉணவகங்கள்இனம் காணப்பட்டதை அடுத்து அதன் உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்குவிசாரணைகளை அடுத்துஓர்உணவகத்துக்கு80 ஆயிரம் ரூபாவும், மற்றைய உணவகத்துக்கு 30 ஆயிரம் ரூபாவும்நீதிமன்றம் தண்டம் விதித்தது.அத்துடன்உணவகத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்வரையில்உணவகத்துக்கு சீல் வைக்குமாறும் மன்று கட்டளையிட்டது.

அதேவேளை காலாவதியான பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்த பலசரக்கு கடை உரிமையாளருக்கு எதிரான வழக்கு விசாரணையை அடுத்து , அவருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# கடன்களை நீண்டகால அடிப்படையில் திருப்பிச் செலுத்துவது குறித்துப் பேச்சு

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



கடன் நிலுவைத் தொகையை நீண்ட கால அடிப்படையில் வழுங்குவதற்கான பேச்சுக்களை நாம் தற்போதுமுன்னெடுத்துவருகிறோம் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடனை மறுசீரமைக்கவில்லை என்றால், வருடத்திற்கு 6 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடன் சுமையாக இருக்கும். இதனைச் செலுத்த கடினமாக இருப்பதால், கடனை செலுத்துவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, கடனை மறுசீரமைப்பதற்கு இந்த செயல்முறை பின்பற்றப்படுகிறது.

தற்போதிருக்கும் முறையில் அதனை மீளச் செலுத்தமுடியாது என்பதால் எமக்கு கடன் வழுங்கிய வணிக நிறுவனங்களிடமும், தனியார் நிறுவனங்களிடமும், அதற்கான நிவாரணம் வழுங்குமாறும் அந்தந்த அரசுகளிடம் கேட்டுக் கொள்கிறோம்.

இச்செயல்பாட்டின் முதற்படி கடன்வழுங்குபவர்களால் வழுங்கப்படும் நிதி உத்தரவாரம். நமது கடனை நிலையானதாக மாற்றுவதற்கான இலக்குகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஆவணத்தில் உள்ளன. அந்த நிலையான நிலையை அடைய, ஒவ்வொரு நாடும் ஆதரவு தருவதாக உறுதி அளித்துள்ளன.

அடுத்த கட்டமாக அந்த உத்தரவாதத்தின் பிரகாரம் பேச்சு நடத்தி வருடத்திற்கு 6 பில்லியன் என்ற வீதத்தில் நாம் செலுத்த வேண்டிய கடனை இந்த நேரத்தில் செலுத்த முடியாது. ஆனால் நீண்ட கால அடிப்படையில் செலுத்த வாய்ப்பளிக்குமாறு கோரிக்கை விடுக்கவேண்டும்.

மீண்டும் கடன் வாங்கவோ, கொடுக்கவோ மாட்டோம் என்ற நிலை இல்லை. கடன் வாங்கும் போது, அதைத் திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. இல்லையெனில், யாரும் மீண்டும் கடன் கொடுக்க மாட்டார்கள். எங்களால் கடனை அடைக்க முடியாததால், மீளச் செலுத்தாமல் இருப்பதற்குப் பதிலாக நிவாரண அடிப்படையில் செலுத்த வாய்ப்பளிக்குமாறு கோருகிறோம்.

உதாரணமாக, தற்போது 10 ஆண்டுகளில் 50 பில்லியன் செலுத்த வேண்டும் என்றால், நாங்கள் 20 - 30 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட கால அவகாசம் தருமாறு கோரிக்கை விடுக்கலாம். ஆண்டுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சத வீதத்துக்கு மேல் கடனை மீளச் செலுத்த முடியாது. அதன்படி, அந்த எண்ணிக்கையை குறைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்றார்.

# நீதித்துறையை அச்சுறுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும்

## சிவில் சமூகத்தினர் கல்விமான்கள் கூட்டாக வேண்டுகோள்

நீதித்துறையை அச்சுறுத்துவதை கைவிடவேண்டும், ஜனநாயகத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதை கைவிடவேண்டும் தேர்தலை நடத்தவேண்டும் என சிவில் சமூக பிரதிநிதிகள் பலர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை உச்சநீதிமன்றம் மீறியுள்ளது என்ற பொய்யான சாக்குப் போக்குடன் நீதித்துறையை அச்சுறுத்துவதற்கு ஜனாதிபதியும் அரசாங்கத்தின் சில உறுப்புனர்களும் மேற்கொள்ளும் முயற்சிகளை திகைப்புடன் அவதானிப்பதாக சிவில் சமூக பிரதிநிதிகள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

உள்ளூராட்சித்தேர்தலை நடத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை வழுங்காமலிருப்பதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ள தைத் தொடர்ந்தே இந்த குற்றச்சாட் டுகள் எழுந்துள்ளன என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

2023 இல் உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை எந்த அரச ஸ்தாபனமும் நிறுத்திவைப்பதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவையும் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் ஜனநாயக செயற்பாடுகளைக் குறைமதிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள இந்த புதிய நடவடிக்கைகளை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம் எனத் தெரிவித்துள்ள அவர்கள், இந்த விடயத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக் கையை முழுமையாக ஏற்றுக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளதுபோல நீதித்துறையின் சுதந்திரத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் சட்டத்தின் ஆட்சி நாட்டு மக்களின் உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தைக் கடும் அவமதிப்பு செய்வதாகும் எனவும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

# புகைக்கூண்டுக்குள்ளால் வீட்டில் இறங்கித் திருட்டு

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்டசங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தை அண்மித்த வீடொன்றில் புதன்கிழமை பிற்பகல் பணம் மற்றும் நகை ஆகியன திருட் டுப் போயிருப்பதாக சாவகச் சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் ஆட்கள் இல்லாதவேளையில் சமையல் அறையின் புகைக்கூடு வழியாக உள் நுழைந்த திருடன் வீட்டில் இருந்த இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான ஒன்றரைப் பவுண் நகை மற்றும் 75ஆயிரம் ரூபாய் பணம் ஆகியவற்றை திருடிச் சென்றிருப்பதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

# நுட்பமாக கடத்திய கஞ்சா சிக்கியது

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்டமீசாலைபகுதியில் முச்சக்கரவண்டியில் சூட்சுமமான முறையில் கஞ்சா கடத்திய நபர் ஒருவர் வெள்ளிக்கிழமை காலை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

முச்சக்கரவண்டி ஒன்றில் கஞ்சா கடத்தப்படுவதாக சாவகச்சேரிப்பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸார் வண்டியைச் சோதனையிட்டனர்.

முச்சக்கரவண்டியின் இசைக்கருவிக்குள் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட ஒரு கிலோ 800 கிராம் கஞ்சாவைப் பொலிஸார் ஒரு வழியாகத் தேடிக் கண்டுபிடித்தனர்.

முச்சக்கரவண்டிச் சாரதியான கிழக்கு பகுதியைச் சேர்ந்த 30 வயதான இளைஞரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைதான சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மட்டக்களப்பு வயல் நிலங்களுக்கான அடி உர அளவை உயர்த்த வலியுறுத்து

(கல்லடி செய்தியாளர்)

விவசாயத்திற்கான அரச உதவிகள் வழங்கப்படுவதில் மட்டக்களப்பு மாவட்டம் ஏதோ ஒரு விதத்தில் புறக்கணிக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட அதிகார சபைத் தலைவர் அருளானந்தராசா ரமேஸ் தெரிவித்தார். இந்த முறையும் சிறுபோகத்துக்கான அடிக்கட்டு உரம் தேவையான அளவைவிடக் குறைவாகவே தரப்படுவதாக அவர் குற்றஞ்சாட்டினார். அதனை அதிகரிக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னர் இருந்தே ஏதோ ஒரு வகையில் தமது மாவட்டம் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். மட்டக்களப்பு நகரத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரி.எஸ்.பி. எனப்படும் அடிக்கட்டுப் பசளையானது ஏனைய மாவட்டங்களுக்கு 22 கிலோ கிராம், 15 கிலோகிராம் எனப் பரிந்துரைக்கப்படுகிறது. மட்டக்களப்பு மண் கல்சியம் கலந்தது. இதில் இருவாட்டி மண் அல்லது களி மண் மிகக் குறைவு. அப்படியிருந்தும் மட்டக்களப்புக்கு 15 கிலோ அடிஉரம்தான் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் பொலனறுவை, அனுராதபுரம், மன்னார், அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கு 22 கிலோகிராம் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

அடிக்கட்டு உரம் என்பது பயிர்களைப் பொறுத்தவரையில் விலங்குகளின் கடும்புப் பாலைப் போன்றது. மிருகங்கள் தமது குட்டிகள் பிறந்ததும் கொடுக்கும் கடும்புப் பால் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிக புரதத்தையும் கொண்டது. அதுபோன்றதே பயிர்களுக்கான அடித்தட்டு உரமும்.

இந்த அடிக்கட்டுப் பசளை மூலம்தான் நெற்பயிரின் வேர்த் தொகுதி சிறப்பாக வளர்ச்சியடையும். அதிக கிளைகள் வெடிக்கும். தண்டுகள் வளர்ச்சியடையும். அடிக்கட்டுப் பசளை இடாத பட்சத்தில் வேர்த் தொகுதி சரியாக அமையாது.

இதற்குப் பிற்பாடு பயன்படுத்தும் நைதரசன், எம்.ஓ.பீ அல்லது நுண் மூலகங்களாக இருக்கலாம். அடித்தட்டு உரம் போடாத வேர்த் தொகுதி இவற்றை ஒழுங்காக உறிஞ்சாது. ஆகவே அந்தச் சந்தர்ப்பத்தில் நீரிலோ அல்லது வளிமண்டலத்திலோ ஏனைய உரங்கள்கூட, வீண்விரயமாக்கப்படும். அத்தோடு விளைச் சலிலும் பெரும் தாக்கம் ஏற்படும்.

விவசாயத் திணைக்களத்தின் தகவலின்படி மட்டக்களப்பில் ஏக்கருக்கு 25 கிலோ கிராமாவது அடியுரம் இட வேண்டும். அதே போன்று விளைச்சலை அதிகரிக்க வேண்டுமானால் 100 புசல் விளைச்சலைப் பெற ஏக்கருக்கு 45 கிலோகிராம் வரை இட வேண்டுமென்ற தகவலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

2020ஆம்ஆண்டுவிவசாயத்திணைக்களம் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் பெறப்பட்ட முடிவுகள் ஆக்கபூர்வமானதாக அமையாது. ஏனெனில் இதற்கெனப் பெறப்பட்ட மாதிரிகள் காடு மேடுகளிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் மட்டக்களப்பு நெற்காணிகளில் கூடியளவு பொஸ்பரஸ் உள்ளதாக ஆய்வின் முடிவுகள் தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது. அதனடிப்படையில் 22 கிலோ கிராம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.




ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் இங்கு மணல் சார்ந்ததாக மண் காணப்படுவதனால் எமது மாவட்டத்துக்கு 22 கிலோ கிராமைவிட அதிகமாக ரீ.எஸ்.பீ. உரம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

நாம் நெற் பயிர்ச் செய்கையைச் சிறப்பாகச் செய்ய மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அபிவிருத்திக் குழுத் தலைவர், விவசாயத் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழகச் சமூகம் ஆகியன ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் - என்றார்.

# சாலிய பீரிஸின் அலுவலகம் முன்பாக நடந்த ஆர்ப்பாட்டதுக்குக் கண்டனம்



## சட்டத்தரணிகள் சங்கம் விடுத்தது

ஜனாதிபதிசட்டத்தரணிசாலிய பீரிஸின் அலுவலகத்துக்கு முன் பாகவெள்ளிக்கிழமைமுன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் இலங்கைசட்டத்தரணிகள்சங்கம் கடும்கண்டனம்வெளியிட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த போதைப் பொருள் கடத்தல்காரனான 'ஹரக்கட்டா' என்று அறியப்படும் நதுன் சிந்தக்க சார்பில் ஆஜரான மைக்கு எதிர்ப்புத்தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இது தொடர்பில் கடும்கண்டனத்தைவெளிப்படுத்தியிருக்கும்சட்டத்தரணிகள்சங்கம், சட்டத்தரணி என்ற ரீதியில் சாலிய பீரிஸால் முன்னெடுக்கப்படும் தொழில்சார் கடமைகளுக்கு எவ்விதஇடையூறும்ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிடம் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளது.

அதுமாத்திரமன்றி சாலிய பீரிஸின் அலுவலகத்துக்கு முன் பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டமை,தமதுசேவைபெறுநரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அவர் கொண்டிருக்கும் உரிமைக்கு இடையூறு ஏற்படுத்தும்வகையில் அமைந்துள்ளது என்றும் சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில் அவரது தொழில் சார் உரிமையையும், அவரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அச்சங்கம் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கைவிடுத்துள்ளது.




# வாசல் கவிதை சஞ்சிகை திருமலையில் வெளியீடு





வாசல் வாசகர் வட்டத்தின் வெளியீடான வாசல் கவிதை சஞ்சிகை கடந்த வியாழக்கிழமை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு, வாசல்வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதனின் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு, ஆசியுரையை திருகோணமலை ஶ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் பிரதம குரு சோ.இரவிச்சந்திர குருக்கள் வழங்கியதுடன் சஞ்சிகையின் முதல் பிரதியையும் பெற்றுக்கொண்டார்.

பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சூ.பார்த்தீபன் கலந்து கொண்டதுடன், சிறப்புவிருந்தினராக தமிழ்நாட்டின் நந்தவனம் சஞ்சிகையின் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன், கௌரவ விருந்தினராக மூத்த கவிஞர் அம்.கௌரிதாசன், வாசல் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ச.திருச்செந்தூரன், கவிஞர் க .யோகானந்தம், தமிழகத்தின் முன்னணி எழுத்தாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# கையை வெட்டியவர் நீதிமன்றில் சரண்

மொரட்டுவை தெல் கஹவத்த பிரதேசத்தில் மின்சார ஊழியர் ஒருவரின் கைகளை வெட்டியதாக கூறப் படும் சந்தேக நபர் சட்டத்தரணி ஊடாக நீதி மன்றில் சரணடைந்துள்ளார் என மொரட்டுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் கொரலவெல்லபிரதேசத்தைச்சேர்ந்த 40 வயதுடையவர்.

மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேகநபர் மொரட்டுவ தெல்கஹவத்த சந்தியில் மின்சார ஊழியரை வாளால் தாக்கியுள்ளார். பின்னர், அவரது துண்டிக் கப்பட்டகையை சந்தேகநபர் எடுத்துச்சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்



- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

**1. உரலார் கேள்வி:-** ஒரு மாதிரியாக ஜனாதிபதி, சர்வதேசநாணய நிதியத்திடம் கடன் பெற்றுவிட்டார்?

**உலக்கையார் பதில்:-** இப்போது, ரணிலை நான் பாராட்டுவதற்கான காரணம் புரிகிறதா? 'புத்திமான் பலவான்' என்று சும்மாவா சொன்னார்கள். அனுபவஸ்தனின் அவசியத்தை நாடு இப்பொழுது தான் உணர்கிறது. வாக்குத் தந்தது போல இனப்பிரச்சினையையும் தீர்த்துவிட்டால் இலங்கையின் நிரந்தர 'ஹீரோ' ஆகிவிடுவார் ரணில்.

**சல்லடையாரின் சலிப்பு * வாங்கார் வாங்கார் எண்டியலே! வாங்கிவிட்டார் கண்டியலே!**

**2. உரலார் கேள்வி:-** கன்னியா வெந்நீர் கிணற்றுச் சிவன் கோயிலுக்குக் கீழ், பௌத்த விகாரைப் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாய் தொல்பொருள் ஆராய்ச்சி நிலையம் கூறியிருக்கிறதே?

**உலக்கையார் பதில்:-** கேட்பார் இல்லாவிட்டால், தம்பி சண்டப் பிரசண்டன் என்பார்கள். இங்கும் அதுதான் நடக்கிறது. யார் கண்டது, வரும் நாட்களில் பௌத்த விகாரைப் படிமங்கள் கோணேஸ்வரம், கேதீஸ்வரம், நல்லூர், மாவிட்டபுரம் ஆகியவற்றின் கீழேயும் கிடைத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அழ, அழ மற்றவர்களிடமிருந்து நாம் பறித்தெடுக்கும் பொருள்கள் எல்லாம் நாம் அழ, அழ என்றோ ஒருநாள் மற்றவர்களால் பறித்தெடுக்கப்படும் என்கிறார் வள்ளுவர். ('அழக்கொண்டதெல்லாம் அழப்போம்'). உண்மைகளை அதிக நாள் எவராலும் மறைக்க முடியாது. காலம் அதனை என்றோ வெளிப்படுத்தியே தீரும். பாவம்! இயற்கையின் ஆற்றல் உணராமல் ஏமாற்றப் பார்க்கிறார்கள். காலத்தின் அடி விழக் கதறப்போகிறார்கள். காத்திருப்போம்!

**சல்லடையாரின் சலிப்பு * கெடுகுடி சொற்கேளாது பாருங்கோ!**

**3. உரலார் கேள்வி:-** அண்மையில் உங்களை வியப்பில் ஆழ்த்திய விடயம் ஏதேனும் ஒன்றைப் பற்றிச் சொல்லுங்களேன்.

**உலக்கையார் பதில்:-** கடவுள்தான் உங்கள் மூலமாக இந்தக் கேள்வியைக் கேட்பித்திருக்கிறார். மனதை மிகவும் பாதித்த விடயம் ஒன்று, கடந்த வாரம் பூராகவும் என் உள்ளத்தினுள் ஓடிக்கொண்டேயிருக்கிறது. அதை எவரிடமேனும் இறக்கி வைப்பதற்காய், கருச்சுமந்ததாய் போலத் தவித்துக் கிடந்தேன். உங்கள் கேள்வி அதற்கான வாய்ப்பை அளித்திருக்கிறது. உங்களுக்குக் கோடி நமஸ்காரங்கள்.

சென்ற வாரம் 'சாணக்கியா யுரியூப் சனலில்' பாண்டே அவர்கள் நடத்திய ஓர் நேர்காணலைக் கேட்டேன். அதைக் கேட்டு முடித்தபோது ஏற்பட்ட உணர்வை வியப்பு என்று சொல்வது தவறு. பிரமிப்பு என்ற வார்த்தைதான் அதற்குப் பொருத்தமாய் இருக்கும் போல்த் தோன்றுகிறது.

பாண்டேயின் ஆற்றல் மீது நான் கொண்டிருக்கும் மதிப்பை, ஏற்கனவே இக் கேள்வி பதில் பகுதியில் வெளிப்படுத்தி, பலரிடம் திட்டும் பாராட்டுமாய் வாங்கிக் கொண்டேன். அதைப் படித்த உங்களில் பலர், இவர் மீண்டும் ஒருதரம் பாண்டேக்கு புகழ்முடி சூட்டப்போகிறார் என்று நினைப்பீர்கள். அப்படி நீங்கள் நினைத்தால் இப்பதில் கண்டு ஏமாறப் போகிறீர்கள். அதை முன்னமே சொல்லிவிடுகிறேன்.

இத்துணை முன்னுரை எதற்கு? நேராக விடயத்திற்கு வரலாமே என்கிறீர்களா? வருகிறேன். அதற்கு முன் இன்னும் சில சொல்ல வேண்டியிருக்கிறது.

பாண்டே செய்யும் நேர்காணல்களில் பெரும்பாலும் நாம் பாண்டேயின் விஸ்வரூபத்தைக் காண்பதுதான் வழக்கம். வாதத் திறமையாலும் விரல் நுனியில் வைத்திருக்கும் புள்ளிவிவரங்களாலும் தேவையானவற்றைத் தேவையான அளவு சொல்லும் ஆற்றலாலும், வாய்மொழியால் மட்டுமன்றி, உடல் மொழியாலும் எதிரில் இருப்பவரை பாண்டே துவம்சம் செய்துவிடுவார். ஆனால் நான் கடைசியாய்ப் பார்த்த நேர்காணலில் பாண்டே பெரும்பாலும் காணாமலே போய்விட்டார்.

அப்படியா? நல்லதாய்ப் போயிற்றே. பாண்டேயின் மூக்கை உடைத்த அந்தப் புண்ணியவான் யார்? நீங்கள் ஆர்வப்படுவது தெரிகிறது. அதுதான் உங்கள் விருப்பானால் மீண்டும் நீங்கள் தவறிழைத்துவிட்டீர்கள். பாண்டே காணாமல் போனார் என்பது உண்மைதான். ஆனால் அந்த நேர்காணலில் யாரும் அவரது மூக்கை உடைக்கவில்லை. சண்டைக்கே போகாத போது தோற்பது எப்படி? பிரமிப்பான ஓர் பெண்மணியைக் காண்கின்ற பொழுது இயல்பாக ஏற்படுகிற அடக்க நிலைக்கு அவர் போனதைத்தான் அவர் காணாமல் போனார் என்று சொன்னேன்.

இராமாயணத்தில் அனுமன் பேர் அறிஞன், பேர் ஆற்றலாளன், பெரும் சொல்வல்லான் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். அவன் இராமன், இராவணன் போன்றோரின் முன்னால்கூட தன் ஆற்றலை அடையாளப்படுத்தி நிற்பான். அத்தகையவன் அசோகவனத்தில் சீதையின் உயர்வுகளைக் கண்ட பின்பு, அவள் முன் தோன்றும் போதெல்லாம் ஒன்றுமே இல்லாதவன் போல் தன் ஆற்றல், அறிவு அனைத்தையும் தொலைத்து நிற்பதைக் கம்பகாவியத்தில் நாம் காண்கிறோம். அதற்குக் காரணம் சீதை என்கின்ற பெண்மையின் எழுச்சிதான். குறிப்பிட்ட நேர்காணலைக் காணும் போது இந்தச் செய்திதான் எனது ஞாபகத்திற்கு வந்தது.

விடயத்தைச் சொல்லாமல் மீண்டும் இந்த நீட்சி தேவைதானா? என நீங்கள் சலிப் புறுவது தெரிகிறது. இனியும் நீட்டினால் நீங்கள் என்னை அடித்தாலும் அடித்துவிடுவீர்கள். அதனால் விடயத்திற்குள் வந்துவிடுகிறேன். புகழ்பெற்ற எழுத்தாளர் சிவசங்கரி அவர்களுடனான ஓர் நேர்காணலைப் பல பகுதிகளாக 'சாணக்கியா' வெளியிட்டிருந்தது. அந்த நேர்காணல் பற்றிய எனது எண்ணங்களைத்தான் முன்னால் சொல்லியிருக்கிறேன்.

தனக்கு எண்பது வயதாகிவிட்டதாய்ச் சொல்லிப் பேசத் தொடங்கிய சிவசங்கரி அம்மையார் அவர்களின் நேர்காணலைப் புகழ வார்த்தைகளைத் தேடிக் களைத்து நிற்கிறேன். எப்பேர்ப்பட்ட அறிவு, எப்பேர்ப்பட்ட ஞானம், எப்பேர்ப்பட்ட சிந்தனை, எப்பேர்ப்பட்ட தெளிவு, எப்பேர்ப்பட்ட அனுபவம். எப்பேர்ப்பட்ட மானுடநேயம் அப்பப்பா! வார்த்தைகளுக்குள் அடங்காத ஆற்றல் அது. நேர்காணல் என்றாலே பலரிடமும் ஒரு பரபரப்புத் தொற்றிக் கொள்ளும். அதுவும் பாண்டேயுடனான நேர்காணல் என்றால் கேட்கவே வேண்டாம். ஆனால் சிவசங்கரி அம்மையார் எந்தவித பரபரப்பும் இன்றிப் பக்கத்துவீட்டுப் பெண்மணி நம்முடன் இயல்பாகப் பேசுவது போல் பாண்டேயிடம் மிக இயல்பாக உரையாடினார். அதில் துளியளவும் பரபரப்பு இல்லை.

பக்கத்துவீட்டுப் பெண்மணி போல இயல்பாகப் பேசினாலும், அந்தப் பேச்சில் வெளிப்பட்ட அவரது ஆற்றல்களும், திறமைகளும், தகுதிகளும் அவரை வாமனன் விஸ்வரூபம் கொண்டாற்போல் கேட்டோர் மனதில் வானளவாய் வளர்த்திக் காட்டியது.

அவரது குடும்பப் பாரம்பரியத்தின் பெருமை, கணவர்மேல் அவர் கொண்ட காதல், குடும்பத்தில் இருந்த பெரியவர்களின் கட்டுப்பாடு, அதேநேரத்தில் குடும்பப் பெரியவர்கள் உலகத்தை நேசிக்கவும், காலத்திற் கேற்ப மாற்றமுறவும் காட்டித்தந்த விதம், பரதத்தின்மேல் அவருக்கு இருந்த ஈர்ப்பு, வேலைக்குச் சேர்ந்த அனுபவம், எழுதத் தொடங்கிய சூழ்நிலை, மெல்ல மெல்ல எழுத்தின் ஆழம் உணர்ந்த அழகு, ஜெயலலிதா, மூப்பனார் போன்ற அரசியல் தலைவர்களது நெருங்கிய நட்பு, உயர் தலைவர்களுடன் உடன் இருந்து நிகழ்த்திய பேட்டிகள், பெயர் குறிப்பிட்டு அழைக்கும் அளவிலான இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி போன்றோரின் நெருக்கம், மாரக்கிரட் தட்சர், பிடல் காஸ்ரோ போன்றோரது தரிசனம், அரசியலுக்கு வந்த அழைப்பு, அதை நிராகரித்த அழகு, போதை ஒழிப்புப் பற்றிய தனது முயற்சி, இடையில் அரசே மது விற்பது பற்றிய பாண்டேயின் கேள்விக்கு அளித்த சமாளிப்பு இல்லாத ஆணித்தரமான பதில், இலக்கியத்தால் பாரதத்தை ஒன்றுபடுத்த முயன்ற பிற்கால பெரு முயற்சி, நன்றிக்கடன் பற்றிய கேள்விக்குப் பதிலாக உலகம் முழுவதையும் உட்கொணர்ந்த விதம், முதுமையை எதிர்கொள்வது பற்றிய இளமையான விளக்கம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகியவற்றிற்கு அளித்த வரையறை என அவர் விபரிக்க விபரிக்கக் கேட்ட என் நெஞ்சம், என்னை அறியாமல் அவர் பாதங்களில் வீழ்ந்து பணிந்தது.

பாண்டேயின் நிலையும் அதுவாய்த்தான் ஆயிற்று என்று நினைக்கிறேன். இடையில் ஒருதரம் வழக்கமான தனது குசும்பை அவர் காட்ட முயல, அவ்விடத்தில் அம்மையார், போர் தொடுக்காமலேயே அவரை வெற்றி கொண்டார். பாண்டேயின் குசும்பை வெளிப்படையாய்க் கண்டிக்காமல் மிக இயல்பாய், முகமாற்றம் ஏதும் இன்றி, 'பழைய ஆனந்த விகடன் ஜோக் போல் பேசுகிறீர்கள்' என்று அதனை அவர் கடந்த விதம் பிரமிப்பைத் தந்தது. அவரது அறிவு நிறைவின் அடையாளம் அது. குறித்த ஓர் எல்லைக்கு மேலே, அம்மையாரின் தகுதி உணர்ந்து தனது நேர்காணல் பாணியை முற்றாக மாற்றி, ரசிகர்களுக்கு அம்மையாரை முழுமையாய்த் தரிசனம் செய்து வைப்பதையே முழுவேலையாய்ச் செய்து பாண்டே அடக்கத்துள் உயர்வு காட்டி அதிசயிக்க வைத்தார்.

சொல்வதானால் அம்மையாரை, ஆண்டவன் போல் தரிசிக்கச் செய்த இந்த நேர்காணலின் பெருமையைச் சொல்லிக் கொண்டே போகலாம். இயல்த்துறையில் ஆழமானவர்களின் தொகை அருகிவிட்டது என்று என் மனம் அண்மைக்காலமாய் நினைத்து வருகிறது. எங்களது தமிழ்ப் பேராசிரியர்களையும், பேச்சாளர்களையும் மட்டுமே இயல்த்துறை அறிஞர்களாய் நினைத்த எனது தவறு அது என்பதை அன்று தெரிந்து கொண்டேன். அம்மையாரின் நேர்காணல் எனது அந்த எண்ணத்தை உடைத்தெறிந்தது. இயல்த்தமிழ்தான் இன்றைக்கும் தலைமைத்தமிழ் என்னும் தகுதியை அம்மையார் உறுதிப்படுத்திக் காட்டினார்.

அன்று தொட்டு இவ் அம்மையாரின் எழுத்துக்களின் ரசிகன் நான். ஆனால் இந்த நேர்காணல் அவரை எழுத்தாளராக மட்டுமன்றி ஓர் சான்றோராக, ஓர் பேரறிஞராக, ஓர் மானுடநேயராக, ஓர் தேசப்பற்றாளராக இனம் காட்டி, நிகரற்ற ஓர் அற்புதரைத் தரிசனம் செய்ய வைத்தது. அதற்காக சாணக்கியாவிற்கும், பாண்டேக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இன்று தம்மைப் புரட்சிப் பெண்கள் எனக்கூறிக் கதைகளிலும், கவிதைகளிலும், கட்டுரைகளிலும் ஆண்களும் சொல்லக் கூசுகிற வார்த்தைகளைப் போட்டு, அலப்பறை செய்து கொண்டிருக்கும் பெண்மணிகள் அம்மையாரின் இந்த நேர்காணலை ஒருதரம் கேட்கவேண்டும். அப்போதுதான் ஆலமரம் என்பதன் தகுதி எது? அதன் அடியில் முளைத்த புல்லின் தகுதி எது? என்று உணர்வார்கள். அவர்களை விட்டுத் தள்ளுங்கள். 'திருத்தலாம் ஆகில் அன்றோ திருத்தலாம்'.

ஔவைக்கு நிகரான ஓர் அறிஞரைத் தரிசித்த மகிழ்ச்சியில் சென்ற வாரம் முழுவதும் என்னால் தூங்கமுடியவில்லை. இந்த நேர்காணலைக் கேட்கத் தவறுபவர்கள் நிச்சயம் அபாக்கியவான்களே. அறிவுத்துறை சார்ந்த அத்தனை பேரும் கேட்கவேண்டிய ஓர் அற்புதமான நேர்காணல் அது. பாரதி சொன்ன 'அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி, அகத்திலே அன்பினோர் வெள்ளம்', 'பொறிகளின் மீது தனி அரசாணை பொழுதெலாம் நினது பேரருளின் நெறியிலே நாட்டம்' எனும் பாடலின் குறியீடாய் அமைந்த ஒருவரின் நேர்காணல் அது. அதனைக் கேட்டுக் கொண்டிருந்த போது பல இடங்களில் என் கண்கள் அருவியாயின.

சுருங்கச் சொல்வதானால் சீதையைக் கண்டுவிட்டு வந்த ஆஞ்சநேயன் சொன்ன 'இப்பிறப்பு என்பதொன்றும், இரும்பொறை என்பதொன்றும், கற்பெனப்படுவதொன்றும், களிநடம்புரியக் கண்டேன்.' என்ற அடிகளைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

நிறைவாக, சாதாரண ஒரு நேர்காணலுக்கு இவ்வளவு பெரிய புகழ் மாலையா? என்று நீங்கள் நினைப்பது புரிகிறது. ஒருதரம் 'சாணக்கியா சனலில்' அந்த நேர்காணலைக் கேட்டுப் பாருங்கள். பிறகு இப்புகழ்ச்சி போதாது என்பீர்கள்.

**சல்லடையாரின் சலிப்பு * வாரிதியாரிடம் இருந்து இத்தனை பெரிய பாராட் டுப் பத்திரமா? ஒருதரம் அந்த நேர்காணலைக் கேட்கவேண்டியதுதான்.**



காலைக்கதிர் Kalaikkathir

# காசநோய் விழிப்புணர்வு பேரணி










காச நோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் வவுனியாவில் விழிப்புணர்வு பேரணி வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது உலக காச நோய் தினத்தில் வவுனியா மாவட்ட வைத்தியசாலை காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி இடம்பெற்றது.

காச நோய் தொடர்பான கருத்தரங்கு ஒன்றும் காலை 9.30 மணிக்கு காச நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு அலுவலகத்தில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து ஆம்! எங்களால் காசநோயினை முடிவுக்கு கொண்டு வர முடியும் - எனும் தொனிப்பொருளில் மக்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பேரணி இடம்பெற்றது.

காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவிலிருந்து புறப்பட்ட பேரணி புதிய பேருந்துநிலையம் ஊடாகசென்று, ஏ9 வீதியூடாக ஹொரவப்பொத்தானை வீதியியை அடைந்து, பசார் வீதியூடாக வவுனியா மணிக்கூட்டுக் கோபுர சந்தியை அடைந்து, பழைய பேரூந்துநிலையம் சென்று அங்கிருந்து மீண்டும் வைத்தியசாலையை வந்த டைந்தது.

இப்பேரணியில் காச நோய் தொடர்பான பதாதைகளை ஏந்திய வண்ணம் குறித்த பிரிவிற்கான வைத்தியர்கள், தாதியர் கல்லூரி மாணவர்கள், சுகாதார பிரிவினர், பொலிஸார் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது, காசநோய் விழிப்புணர்வு துண்டுபிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

## காசநோய் இனம் காணப்படாத பலர் பொதுவெளியில் உள்ளனர்

### வைத்தியர் சந்திரகுமார் எச்சரிக்கை

காசநோய் அறிகுறியுடைய பலர் அதற்கான பரிசோதனைகளை முன்னெடுக்காமல் பொது வெளியில் உலாவித்திரிகின்றனர் என வவுனியா மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

உலககாச நோய்தினம் வெள்ளிக்கிழமை நினவு கூரப்பட்டது. சாதாரணமாக ஒரு நாட்டில் ஒருலட்சம் பேருக்கு 63 நபர்கள் காசநோயாளர்களாக இருக்க வேண்டும். ஆனால் இலங்கையைப் பொறுத்த வரை அந்த எண்ணிக்கையானோர் இனம்காணப்படவில்லை.

இலங்கையில் வருடத்துக்கு 13 ஆயிரம் காச நோயாளர்கள் அடையாளம் காணப்பட வேண்டிய நிலையில் 8 ஆயிரம் பேரே இனம் காணப்படுகின்றனர். வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடம் 54 பேர் கண்டறியப்பட்டுள்ளனர். ஆனால், இதன் எண்ணிக்கை 100 ஆக இருந்திருக்கவேண்டும். எனவே ஏனைய நோயாளிகள் வெளியில் உலாவித்திரியலாம்.

பிரதானமாக இருமல் மூலமாகவே இந்த நோய் பரவலடைகின்றது. இதனால் விரைவாக அனைவருக்கும் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

இரண்டு வாரங்களுக்கு மேற்பட்ட இருமல், சளியுடன் இரத்தம் வெளியேறல், உணவில் நாட்டமின்மை, உடல் மெலிதல், மாலைநேர காய்ச்சல் போன்றன இந்த நோய்க்கான அறிகுறியாக உள்ளன.

இப்படியான அறிகுறிகள் இருப்பவர்கள் தாமதிக்காமல் வவுனியா வைத்தியசாலையில் அமைந்துள்ள மார்புநோய் சிசிச்சை நிலையத்தில் அதற்கான பரிசோதனைகளை செய்து கொண்டால் நோயை விரைவில் அறிந்துகொள்ள முடியும். இதுவே நாம் பொதுமக்களிடம் கேட்டுகொள்ளும் விடயம். இதற்கான மருந்தை ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக எடுத்துக்கொண்டால் இந்த நோயை முற்றாகக் குணப்படுத்தலாம். இல்லாவிடில் இந்த கிருமி சுவாசப் பையினூடாக உடல் முழுவதும் பரவும் தன்மை கொண்டது. எனவே இருமல் அறிகுறி இல்லாதவர்கள் கூட காச நோயாளர்களாக இருக்கலாம்.

அத்துடன் அநேகமாக நோய் எதிர்ப்புசக்தி குறைவானவர்கள், நீரிழிவு நோயாளர்கள், சிறுவர்கள், இல்லங்களில் வசிக்கும் முதியவர்கள், போன்றவர்களுக்கு இந்த நோய் இலகுவில் தொற்றிக்கொள்ளும் சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே நோயை கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும். மேற்படி விடயம் தொடர்பாக நேற்று வவுனியாவில் விழிப்புணர்வு பேரணி ஒன்றை முன்னெடுத்துள்ளோம். - என்றார்.

## பச்சிலைப்பள்ளி குடிநீர் விநியோக திட்டம் விரைந்து முன்னெடுக்க நடவடிக்கைகள்

### சிறீதரன் எம்.பிக்கு ஜீவன் உறுதியளிப்பு



கிளிநொச்சி மாவட்டம், பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தடைப்பட்டுள்ள குடிநீர் விநியோகத் திட்டத்தை விரைந்து முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பதாக, நீர் வழங்கல் மற் றும் பெருந்தோட்ட உட்கட்மைப்புவசதிகள் அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் உறுதியளித்துள்ளார்.

கடந்த 2023.03.22 ஆம் திகதி, புதன்கிழமை, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர், அமைச்சர் ஜீவன் தொண்டமானை அமைச்சு அலுவலகத்தில் நேரில் சந்தித்து கலந்துரையாடிய போதே அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகபிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்கும் திட்டம், கிளிநொச்சி யாழ்ப்பாணம் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் நிறைவில் பளை பிரதேசத்தின் ஒன்பது கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன் பெறுவார்கள் என்பதோடு எதிர்காலத்தில் இந்தத்திட்டத்தை விரிவாக்கம் செய்யவும் முடியும்.

கடற்கரையை அண்டிய ஒடுங்கிய நிலப்பரப்பை கொண்ட பிரதேசமாக உள்ள பச்சிலைப்பள்ளியின் பெரும்பாலான கிராமங்களின் நிலத்தடிநீர் உவர்நீராகவே காணப்படுகிறது. இதனால் மக்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளுக்கான தீர்வாகவே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் முதற்கட்டப்பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், பளையில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கியை கிளிநொச்சி நீர்த்தாங்கியுடன் இணைப்பதற்கான நீர்குழாய்கள் இன்மையால் இந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதுபற்றி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுசென்றதை அடுத்து, நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் தலைவருக்கு உடனடியாகவே உரிய அறிவுறுத்தல்களை வழங்கிய அமைச்சர் ஜீவன் தொண்டமான், இந்தத் திட்டத்தை விரைவாக நிறைவு செய்து தருவதாக உறுதியளித்துள்ளார்.

## தமிழ் மக்களின் உரிமைகளை பறிப்பதில் அரசு விசேடகவனம்

### சிறிதரன் எம்.பி. ஆக்ரோம்



தமிழர்களின் உரிமைகளை எவ்வாறு பறிக்கலாம் என்பது தொடர்பாக அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. பிற இனங்களையும், அவர்களின் உரிமைகளையும் அழிக்கும் கொள்கையில் இருந்து அரசாங்கம் முதலில் வெளிவர வேண்டும். அதனை விடுத்து செயற்பட்டால் உலகில் உள்ள சொத்துக்கள் அனைத்தையும் கொண்டுவந்தாலும் இந்தநாடு ஒருபோதும் முன்னேற்றமடையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற சர்வதேச நாணய நிதிய ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதியின் விசேட உரைமீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் நிதியுதவிஒத்துழைப்புக்கு அனுமதி கிடைத்தவுடன் ஒரு தரப்பினர் பட்டாசு வெடித்து, கொண்டாடும் நிலை காணப்படுகிறது.

ஆனால் நாடு 54 பில்லியன் டொலர் கடனாளியாக உள்ளது. நாடு பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய வேண்டும். பொருளாதார மேம்பாட்டுக்கான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராக உள்ளோம். பொருளாதாரப் பாதிப்பு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்கள் சுதந்திரமாக, நிம்மதியாக வாழும் சூழல் இந்த மண்ணில் உள்ளதா? பல்வேறு கட்டங்களில் பாதிக் கப்பட்டுள்ள தமிழர்களின் வாழ்வியல் கட்டமைப்பில் ஓர் அனுகுமுறையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா? நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வு காண இது வரையில் ஆட்சிக்கு வந்த அரசதலைவர்கள் அவதானம் செலுத்தவில்லை. சிறந்த தலைவரை இந்த நாடு தெரிவு செய்யவில்லை.

வரி விதிப்பு ஊடாக நாடு முன்னேற்றமடையும் என்றால் இந்த நாடு எப்போதோ முன்னேற்றமடைந்திருக்கும். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேன்மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் வரி விதிக்கப்படுகிறது. இதனால் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நாட்டு மக்களைப் பொருளாதார ரீதியில் அதளபாதாளத்துக்குள் தள்ளி எவ்வாறு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியும்? யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர அரசாங்கம் கடன் பெற்றது. சொந்த மண்ணில் வாழ்ந்த மக்க ளைக் கொல்வதற்கு அதிக ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இதனால் நாடு கடன் சுமைக்குள் தள்ளி இன்று மீள முடியாத வங்கு ரோத்து நிலைக்குச் சென்றுள்ளது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் இன்றும் பயங்கரவாதத் தடுப் புப் பிரிவினரால் நெருக்கடிக்குள்ளாக்கப்படு கிறார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் அரச அதிகாரிகள் கூட பயங்கரவாதத்தடுப்பு பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு பாரிய மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். யுத்தம் முடிவடைந்த பின்னரும் நிம்மதியாக வாழ முடியாத நிலை காணப்படுகிறது.

முன்னாள் போராளிகள் என்ற காரணத்தால் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ்கள் திட்டமிட்ட வகையில் நெருக்கடிக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

தமிழர்களை எந்த நேரமும் விசாரணைக்கு அழைக்க முடியும் என்ற நிலையே இந்த நாட்டில் காணப் படுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாகப் புதிய பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி வெளியானதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் இது வரை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கை ஒரு நீதியான நாடாகக் காணப்படவில்லை. குருந்தூர் மலையில் வலுக்கட்டாயமான முறையில் ஆதிசிவன் ஆலய அம்சங்களை அழித்து விட்டு புத்த விகாரையை பௌத்த பிக்குகள் ஸ்தாபித்துள்ளார்கள்.

முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டுமானப் பணிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டும், பிக்குகள் அதற்கு எதிராக செயற்பட்டு பாரிய விகாரையை அமைத்துள்ளார்கள்.

இந்த நாட்டில் நீதிமன்றங்களை இவர்கள் மதிக்கிறார்களா? நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைய அமைச்சர், அதிகாரிகள் செயற்படுகிறார்களா? இந்த நாட்டில் நீதியில்லை.

மிருசுவில் படுகொலையுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரியை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுதலை செய்தார். ஆனால் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை. திருகோணமலை மாணவர்கள் படுகொலைக்கு இதுவரை நீதி வழங்கப்படவில்லை. மறுபுறம் கிருாந்தி படுகொலைக்கு நீதி கிடைக்கப்பெறவில்லை. ஆகவே நாட்டில் நீதி எங்குள்ளது?

தமிழர்களின் பூர்வீக நிலங்களை எவ்வாறு அபகரிப்பது என்பது தொடர்பாக அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி வருகிறது. நெடுந்தீவு வெடியரசன் கோட்டை என முதலில் வர்த்தமானி வெளியிடப்பட்டது.

பின்னர் அங்கு பிக்குகளின் வசதிக்காக கோட்டையை மடம் என குறிப்பிட்டு இரண்டாவது வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. தற்போது அது ஒரு பௌத்த விகாரை என வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. கடற்படையினர் இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குகிறார்கள்.

இலங்கையின் பௌத்த தமிர்கள் வாழ்ந்துள்ளார்கள். சீனா, ஜப்பான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் பௌத்த மதம் உள்ளது, ஆகவே, இங்கு குறிப்பிடுவதை போன்று அந்த நாடுகளையும் பௌத்த சிங்களம் எனக் குறிப்பிட முடியுமா? தமிழர்கள் ஒரு காலத்தில் பௌத்தர்களாக வாழ்ந்துள்ளார்கள். கி.மு.3 ஆம் நூற்றாண்டு காலத்தில் அதற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

தொல்லியல் நிபுணர்கள் என்.கே. திருச்செல்வனின் ஆய்வு அறிக்கையில் இலங்கையில் 2300 ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்துள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தனர் என பிராமி கல்வெட்டில் ஊடாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் சிங்கள தொல்லியன் நிபுணர்களும் குறிப்பிட்டுள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த சின்னங்கள் கிடைக்கப்பெறும் போது அதன் பிராமின் வடிவம் தொடர்பில் அவதானம் செலுத்தாமல் அந்த பகுதி சிங்கள குடியேற்றம் என அரசாங்கம் தீர்மானிப்பது அபத்தமானது. தமிழ்கள் தமது பூர்வீக நிலங்களில் இருந்து புறந்தள்ளப்படுகிறார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த தமிழர்களின் இருப்பு திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகிறது, தமிழர் பகுதியில் ஓர் இராணுவ படையினர் கனவு கண்டேன் என்று குறிப்பிட்டுக் கொண்டு புத்தர் சிலை வைத்தால் அதனை சிங்கள குடியேற்றமாக எவ்வாறு குறிப்பிட முடியும்?

முறையற்ற வகையில் செயற்படும் போக்கு அரசாங்கத்திடம் உள்ளது. மதம், இனம் ரீதியாக முன்னேற்றம் காணப்பட்டால் மாத்திரமே நாடு முன்னேறும். அதனை விடுத்து பிற இனங்களை அழித்து முறையற்ற வகையில் செயற்பட்டால் உலகில் உள்ள அனைத்து சொத்துக்களைக் கொண்டு வந்தாலும் இந்த நாடு முன்னேறாது. - என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.03.2023இல் வெளியிடப்பெற்றது.

# நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 10 வெள்ளிக்கிழமை 24.03.2023 கதிர் 07

## இந்திய மீனவர் 4 பேர் விடுவிப்பு

எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நான்கு இந்திய மீனவர்கள் இன்று விடுவிக்கப்பட்டனர்.

மார்ச் 12 எல்லை தாண்டி காரைநகர் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 12 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 8 பேர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டனர். இந்த நால்வரும் இன்று வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததால், நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சமயம் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களின் வழக்கு இன்று

2

## 633 கிலோ பீடி இலைகள் சிலாபத்தில் சிக்கின

சிலாபத்தில் கரையோரக் காவல் படையினர் நடத்திய தேடுதலில் 633 கிலோ பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இன்று அதிகாலை சிலாபம் இரணைவில பிரதேசத்தில் நடத்திய தேடுதலில் பாரவூர்திகளுக்குள் (லொறி) மறைத்து வைக்கப்பட்டு எடுத்துச் செல்வதற்குத் தயார் நிலையில் இருந்த இந்த பீடி இல்லைகள் கைப்பற்றப்பட்டன.

பீடி இலைகளை கடத்து- வதற்கு பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் இரண்டு டிங்கி படகுகளும் ஒரு கார் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் என்பனவும் கடத்தலுடன் தொடர்புடையவை என்ற சந்தேகத்தில் கைப்பற்றப்பட்டன.

ஐந்து பேர் சந்தேகநபர்களும் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்- யப்பட்டுள்ளனர்.

குறித்த பீடி இலைகள் இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகளின் பெறுமதி சுமார் 1 கோடி ரூபாய் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

2

# நியதிச் சட்டத்தை உருவாக்கும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை

## வடக்கு ஆளுநருக்கு எதிரான வழக்கில் தெரிவிப்பு





(ந.லோகதயாளன்)

மாகாண நியதிச் சட்டத்தை உருவாக்கும் அதிகாரம் ஆளுநருக்குக் கிடையாது என்று சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் வடக்கு மாகாண ஆளுநருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.


இந்த விடயம் சட்ட மா அதிபரினால் வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராயாவிற்கு எழுத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதாகச் சட்ட மா அதிபர் திணைக்களப் பிரதிநிதி மேன்முறையீட்டு இன்று நீதிமன்றில் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா 2022-10-27 அன்று வாழ்வாதார முகாமைத்துவ முதலாம் இலக்க நியதிச் சட்டம் மற்றும் 2ஆம் இலக்க சற்றுலா அலுவலக நியதிச் சட்டம் என இரு நியதிச் சட்டங்களை வெளியீடு செய்து வர்த்தமானியில் பிரசுரித்திருந்தார். வடக்கு மாகாண சபை கலைக்கப்பட்டதற்குப் பின்னர் அவர் இந்த இரு நியதிச் சட்டங்களையும் உருவாக்கியிருந்தார்.

2

# தேர்தலுக்கான நிதியை ஏன் வழங்க முடியாது?

## பிரதமரிடம் சஜித் கேள்வி




வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை ஏன் வழங்க முடியாது?

இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் இன்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் பணத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வழங்கி தேர்தலை நடத்துவது அரசின் பொறுப்பாகும். ஒரு நாள் அரச செலவினத்தைத் தேர்தலுக்குப் பயன்படுத்தினால் பணம் விரயமாகாது.

நிதியை வழங்காதது சிறப்புரிமை

2



## உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து ஆணைக்குழுவுடன் விரைவில் பேச்சு

### சஜித்துக்குப் பிரதமர் பதில்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களை விரைவில் அழைத்துப் பேச்சு நடத்த எதிர்பார்த்துளோம்.

2

## சதொசவில் பொருள்களின் விலைகள் குறைப்பு

இன்று முதல் நடைமு- றைக்கு வரும் வகையில் லங்கா சதொசவில் 10 அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கிலோ ஒன்றுக்கு,

செத்தல் மிளகாய் ரூ.120 குறைப்பு - புதிய விலை ரூ.1380, வெள்ளை பூண்டு ரூ.25 குறைப்பு - புதிய விலை ரூ.450, சம்பா அரிசி (உள்ளூர்) ரூ.11 குறைப்பு - புதிய விலை ரூ.199, வட்டானா பருப்பு ரூ. 7 குறைப்பு - புதிய விலை ரூ. 298, வெள்ளை சீனி ரூ. 7 குறைப்பு - புதிய விலை ரூ. 210,

பெரிய வெங்காயம் ரூ.10 குறைப்பு - புதிய விலை ரூ.119, நெத்தலி ரூ. 25 குறைப்பு - புதிய விலை ரூ.1100, கொண்டைக் கடலை ரூ.15 குறைப்பு - புதிய விலை ரூ. 555, உருளைக் கிழங்கு (உள்ளூர்) 10 குறைப்பு - புதிய விலை 270 ரூபா, டின் மீன் 425 கிராம் 10 குறைப்பு - புதிய விலை ரூபா 520.

## மரக்கறி விலைகள் வீழ்ச்சி



மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய வர்த்தகர்கள் வராத காரணத்தினால் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் மொத்த விலைகள் வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசா- யிகள் மற்றும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுடன் ஒப்பிடுகையில் மரக்கறிகளின் விலை வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், இதன் காரணமாக விவசாயிகள் உற்பத்திச் செலவை ஈடுகட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் உருளைக்கிழங்கு, சிவப்பு வெங்காயம், பெரிய வெங்காயம் போன்றவற்றின் விலைகள் குறைந்து வருவதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

## ஆசிரியர் நியமன போட்டிப் பரீட்சை இடைநிறுத்தம்

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு இணைப்பதற்கான போட்டிப் பரீட்சையை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு உயர் நீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.

உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்களான விஜித் கே.மலல்கொட, ஏ.எச்.எம். என்.நவாஸ் மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

பட்டதாரிகள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான பரிசீலனை நிறைவு செய்யப்படும் வரை போட்டிப் பரீட்சையை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைக்கப்பட்டுள்ள பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்குவதற்காக போட்டிப் பரீட்சையை நடத்த மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை ஆட்சேபனைக்கு உட்படுத்தி, 04 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

போட்டிப் பரீட்சைக்கான வர்த்தமானி அறிவித்தல் சட்ட விரோதமானது எனவும், இதற்காக அமைச்சரவை உரிய முறையில் தீர்மானங்களை மேற்கொள்ளவில்லை எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அபிவிருத்தி

2

## 330 மில்லியன் டொலர் நேற்றே கிடைத்து விட்டது

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தின் முதலாம் கட்டக் கொடுப்பனவான 333 மில்லியன் டொலர் இலங்கைக்குக் கிடைத்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் உள்ள ஊடகங்களின் செய்திப் பொறுப்பாசிரியர்களை வியாழக் கிழமை ஜனாதிபதி சந்தித்தபோது- நிதி அமைச்சின் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த நான்கு வருடங்களில் நீடிக்கப்பட்ட கடன் திட் டத்தின் மாதங்களில் இலங்கைக்கு 2.286 பில்லியன் டொலர் நிதியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை திங்கட்கிழமை அனுமதியளித்தது. அந்தக் கடனின் முதற்தொகுதியான 333 மில்லியன் டொலர் கிடைக்கப் பெற்றுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் சுமார் 3 பில்லியன் நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கான

2

## பல்வேறு வழிகளிலும் மிரட்டப்படுகின்றோம்

### அறவழிப் போராட்டத் தலைவர் குற்றச்சாட்டு



(து. தர்மேந்திரா)

சட்டத்துக்கும், சமூகநீதிக்குமான அறவழி போராட்ட குழுவின் செயற்பாட்டாளர் கள் பலரும் அச்சுறுத்தப்பட்ட வண்ணம் உள்ளார்கள் என்று அமைப்பின் தலைவர்

2

## நீரில் அடித்துச் செல்லப்பட்ட 2 சிறாரின் சடலங்கள் மீட்பு



ஹாலிஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகொட பகுதியில் நீரில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமல் போயிருந்த இரு சிறார்கள் இன்று சடலங்களாக மீட்கப்பட்டனர்.

10 வயது அண்ணனும், 8 வயது தங்கையுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

போகொட கொட்டியாமலுவ பிரதேசத்தில் வியாழக்கிழமை மாலை கடும் மழை பெய்துள்ளது.

தமது வீட்டில் இருந்து வடிகானுக்கு அப்பால் உள்ள வீடொன்றுக்குச் சென்றிருந்த தாயை அழைத்து வரச் சென்ற சமயம் சிறுவர்கள் இருவரும் வடிகானுக்குள் வீழ்ந்து நீரில் அடித்துச் செல்லப்பபட்டனர் என்று ஊரவர்கள் தெரிவித்தனர்.

இரண்டு சிறுவர்களும் போகொட வித்தியாலயத்தில் தரம் 5 மற்றும் தரம் 2 இல் கல்வி கற்கும் சகோதரர்கள் ஆவர்.

ஹாலிஎல பொலிஸாரும், பொதுமக்களும் இணைந்து சிறுவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டனர். பின்னர் படையினரும் வரவழைக்கப்பட்டனர்.

சிறுவர்களின் தந்தை கொழும்பில் தொழில் புரிந்து வருவதுடன் குறித்த சிறுவர்கள் இருவரும் தாயாரின் அரவணைப்பில் வாழ்ந்து வந்துள்ளனர்.

இன்று காலை தங்கையின் சடலம் மீட்கப்பட்டிருந்த நிலையில், முற்பகல் வேளை அண்ணனின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

## தயாசிறி மீண்டும் களத்தில்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளராக தயாசிறி ஜயசேகர மீண்டும் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் வியாழக்கிழமை

2

# உள்ளூராட்சி, மாகாண சபைத் தேர்தல்கள் மிகவும் அவசியம்: பெருந்தோட்டப் பிரிவினருக்கு வறுமை நிவாரணம் வேண்டும்

## சர்வதேச சமூகத்துக்கு மனோ தெரிவிப்பு





உள்ளூராட்சி சபை, மாகாண சபைத் தேர்தல்கள் இரண்டும் எமக்குச் சமமாக அவசியம். சர்வதேச நிதி உதவிகள் மூலமான 'வறுமை நிவாரணங்கள்' பெருந்தோட்ட பிரிவினருக்கு வழங்கப்படுவது அவசியம். இலங்கை அரசுக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில்உடன்படிக்கைஏற்பட்டமை தொடர்பில் நான் மகிழ்கின்றேன். அதற்கு மிகுந்த ஒத்துழைப்புகளை வழங்கிய உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

இவ்வாறு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், பன்னாட்டு தூதுவர்களுடன் நடத்திய சந்திப்பின் போது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வின் ஏற்பாட்டில் எதிரணிநாடாளுமன்றஉறுப்பினர்கள், இலங்கையிலிருந்து செயற்படும் அமெரிக்க, இந்தியா, பிரிட்டன், ஜப்பான், கனடா, பிரான்ஸ் உள்ளிட்ட 12 நாடுகளின் தூதரகப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடியபோது மனோ இந்தக் கருத்துகளைக் கூறினார்.

இது தொடர்பில் மனோ இன்று விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

இலங்கை அரசுக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் உடன்படிக்கை ஏற்பட்டமை தொடர்பில் நான் மகிழ்கின்றேன். அதற்கு மிகுந்த ஒத்துழைப்புகளை வழங்கிய உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற் போடப்பட்டமை தொடர்பில் இங்கே உரையாடப்பட்ட போது, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், பிற்போடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தல் பற்றி கேள்வி எழுப்பியமையை நான் வரவேற்கின்றேன்.

அதேபோல் இந்தியப் பிரதித் தூதுவரும் தமது நாட்டின் நிரந்தர நிலைப்பாடாக மாகாண சபைத் தேர்தல் இருக்கின்றது எனக் கூறினார். அதையிட்டும் மகிழ்கின்றேன்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் இரண்டும் நடத்தப்பட இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். உள்ளூராட்சி சபைத் தேர்தல் எவ்வளவு முக்கியமோ, அதேயளவு ஒன்பது மாகாண சபைகளுக்கான தேர்தலும் முக்கியம் என்பது எங்கள் கட்சியின் உறுதியான நிலைப்பாடு.

அதேபோல் இலங்கை அரசுக்கு வழங்கப்படும் சர்வதேசநிதி உதவிகள் மூலமான 'வறுமை நிவாரணங்கள்' பெருந்தோட்டப்பிரிவினருக்குகட்டாயமாக வழங்கப்படுவதை சர்வதேச சமூகம் உறுதி செய்யவேண்டும். ஏனென்றால்,

இப்போது நலிவடைந்த பிரிவினரை அடையலாம் காணும் செயற்பாட்டை அரசுமுன்னெடுகின்றது. அதில் நிறைய அரசியல் கலந்துள்ளது. அதன் மீது எமக்கு நம்பிக்கை இல்லை.

இந்தநாட்டில் மிகவும் பின்தங்கிய பிரிவினராக, பெருந்தோட்ட உழைக்கும் மக்கள் உள்ளனர் என்பதை இன்று பல கணிப்பீடுகள் கூறுகின்றன. ஆகவே, உங்களது உதவிகளால் வழங்கப்படும் வறுமை நிவாரணக் கொடுப்பனவுகள், பெருந்தோட்டத்துறைக்கு வழங்கப்படுவதை உறுதிப்படுத்துங்கள் -என்றுள்ளது.

### ஆசிரியர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உத்தியோகத்தர்களாக நியமனம் வழங்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வெற்றிடங்கள் காணப்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டிருந்தனர். எனினும், அவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில், போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர்களாக நியமிக்காமல் அவர்களுக்கு நேரடியாகவே ஆசிரியர் நியமனம் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது இரண்டு நாள்கள் உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து போட்டிப் பரீட்சையை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

### பல்வேறு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கனகரட்ணம் கங்காதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இன்று ஊடகவி–யலாளர்களைச் சந்தித்து இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

சட்டவாட்சியையும், சமூக நீதியையும் நிலை நாட்டுவதில் அறவழி போராட்ட குழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

அடக்குமுறைகளின் அனைத்து வடிவங்களுக்கு எதிராக அற வழியில் நாம் போராடி வருகின்றோம்.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக கடந்த வருட இறுதியில் நாட்டு மக்கள் அணி திரண்டு போராடினர்.

சட்டத்துக்கும் சமூக நீதிக்குமான அற வழி போராட்ட குழு செயற்பாட்டாளர்களும் அமைதி வழியில் இவற்றில் பங்கேற்றனர்.

அதே போல ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க ஆட்சியின் அடக்குமுறைக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் கொழும்பில் இடம்பெற்றன.

இவற்றிலும் அற வழி போராட்ட குழு செயற்பாட்டாளர்கள் பங்கேற்றனர்.

ஆனால் இவற்றை தொடர்ந்து அற வழி போராட்ட குழு செயற்பாட்டாளர்கள் பல விதங்களிலும் அச்சுறுத்தப்பட்ட வண்ணம் உள்ளார்கள்..

குறிப்பாக அற வழி போராட்ட குழு செயற்பாட்டாளர் பெரியகல்லாறை சேர்ந்த தம்பியப்பா தயானந்த் (வயது 39) இயல்பு வாழ்க்கை குழம்பிய நிலையில் உள்ளார்.

இவருடைய புகைப்படத்தை காட்டி என்னிடம்கூட வந்துவிசாரித்தார்கள். வேலியே

பயிரை மேய்கின்றபோது யாரிடம் சென்று முறையிட முடியும்? – என்றார்.

### இந்திய மீனவர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊற்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எல்லை தாண்டிக் கைது செய்யப்பட்ட சமயம் படகில் அதன் உரிமையாளரும் இருந்தமையினால் படகு பறிமுதல் செய்யும்படி ஊற்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டது.

### தயாசிறி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பணிகளை அவர் ஆரம்பித்தார். தயாசிறி ஜயசேகர வெளிநாடு சென்றிருந்த நிலையில், அந்தப் பதவிக்கான பணிகளைக் கவனிக்க சரத் ஏக்கநாயக்கவை கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தேர்தலுக்கான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீறலாகும். உயர் நீதிமன்றம் இதற்கான உத்தரவைக் கூட வழங்கியுள்ளது. இதற்கேற்பச் செயற்படாதது ஜனநாயக விரோத செயலாகும்.

நிதியை வழங்கியவுடன் தேர்தல் பத்திரங்களை அச்சிடுவதற்கு அரச அச்சகம் கூட்டுத்தாபனம் தயாராக இருக்கும்போது, உரிய நிதியை விடுவிக்காததற்குக் காரணம் என்ன? –இப்படிப் பிரதமரிடம் வினவினார் எதிர்க்கட்சித் தலைவர்.

### உள்ளூராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இதனைக் கூறினார்.

நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் நான் கருத்துக்கூற முற்படவில்லை. எனினும், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களை அழைத்து தேர்தல் சம்பந்தமாக கலந்துரையாட எதிர் பார்க்கின்றேன். விரைவில் இந்தச் சந்திப்பு நடைபெறும் – என்றார்.

### 330 மில்லியன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடு 2022 செப்டெம்பரில் எட் டப்பட்டது.

அதனையடுத்து இருதரப்பு கடன் வழங்குனர்களுடனான பேச்சுக்கள் தொடர்ச்சியாக முன் னெடுக்கப்பட்டு கடன்மறுசீரமைப்புக்கான உத்தரவாதம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து வந்த நிலையில் சுமார் 5 மாதங்களின் பின்னர் பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றது.

அதற்கமைய இது தொடர்பான ஆவணம் புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது,

### 633 கிலோ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைது செய்யப்பட்டவர்களும் கைப்பற்றப்பட்டவைகளும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத்திணைக்களத்தினிடம் ஒப்படிக்கப்பட்டுள்ளதாக கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

### நியதிச் சட்டத்தை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவ்வாறு நியதிச் சட்டம் உருவாக்கும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை என்று தெரிவித்து வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. ஆளுநர் அவ்வாறு நியதிச் சட்டம் உருவாக்க முடியாது என்பது அவருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது, அந்த நியதிச் சட்டத்தைத் தான் நடைமுறைப்படுத்த மாட்டார் என்று அவரும் எழுத்து மூலம் சட்ட மா அதிபருக்குப் பதில் அளித்துள்ளார் என்றும் சட்ட மா அதிபரின் பிரதிநிதி நீதிமன்றில் தெரிவித்தார். இதனடிப்படையில் இந்த வழக்கை தொடர்ந்து விசாரிக்காமல் முடித்துக்கொள்ளலாம் என்றும் அவர் நீதிமன்றத்திடம் கோரிக்கை வைத்தார்.

ஆளுநரின் உறுதி மொழியை ஏற்று வழக்கைக்கைவிட முடியாது என்றும் ஆளுநர் தனது நிலைப்பாட்டை நீதிமன்றத்திற்கு நேரடியாக வெளிப்படுத்தினால் மட்டுமே அதனை ஏற்றுக்கொண்டு வழக்கைக் கைவிட முடியும் என்றும் சட்டத்தரணி சுமந்திரன் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனை அடுத்து ஆளுநர் தனது வர்த்தமானி அறிவித்தை நீக்கி மற்றொரு வர்த்தமானி அறிவித்தலை விடுப்பதற்குச் சந்தர்ப்பம் அளித்து மே மாதம் 24ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## கட்டில் தடுப்பில் சிக்கி பெண் குழந்தை சாவு!

கட்டிலைச் சுற்றிப் பொருத்தப்பட்டிருந்த தடுப்பில் சிக்கிப் பெண் குழந்தை உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊவாபரணகம, மஸ்பன்ன கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

மஸ்பன்ன வெலேக்கடே வீடொன்றில் வசித்து வந்த ஹர்னி மதுஷிகா என்ற ஏழு மாத பெண் குழந்தையே படுக்கையில் இருந்து வீழ்ந்து தடுப்பில் சிக்கி உயிரிழந்துள்ளது.

உயிரிழந்த குழந்தையின் தாய் வீட்டில் வேலையில் ஈடுபட்டிருந்த நிலையில், குழந்தை உறங்கிக் கொண்டிருந்த படுக்கையறைக்கு அருகில் வந்து பார்த்தபோது, கட்டிலைச் சுற்றியிருந்த தடுப்பில் குழந்தை மாட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு குழந்தையை மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டது என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் உயிரிழந்த குழந்தையின் சடலம் பிரேத பரிசோதனைக்காக தியத்தலாவை ஆரம்ப வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊவாபரணகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாட்டில் வங்கி வட்டி வீதங்கள் அதிரடியாகக் குறையும் வாய்ப்பு

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறப்படும் நீட்டிக்கப்பட்ட கடன் வசதி எதிர்காலத்தில் இலங்கையில் வட்டி விகிதங்களைக் குறைக்க உதவும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த கடன் வசதி கிடைக்காவிட்டால் அரசாங்கம் அதிக வட்டிக்கு நிதியை வசதிகளை பெற்றிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொலைகாட்சி நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்றாவது அல்லது நான்காம் காலாண்டுக்குள் இலங்கையின் பணவீக்கத்தை ஒற்றை பெறுமதிக்கு கொண்டு வர முடியும் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய பெற்றோலிய அமைச்சக செயலாளர் ஐ.ஓ.சி. தலைவர் இலங்கைக்கு வருகை

இந்தியாவின் பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் செயலாளர் பங்கஜ் ஜெயின் மற்றும் இந்தியன் ஒயில் கோர்ப்பரேன் (ஐ.ஓ.சி.) லிமிடெட்டின் தலைவர் ஷிர்காந்த் மாதவ் வைத்யா ஆகியோர் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என அறிய முடிகின்றது.

நாட்டிற்குவரும் இருவரும், இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியன் ஒயில் கோர்ப்பரேனின் செயல்பாடுகளை அந்த நாட்டின் பெற்றோலியம் மற்றும் இயற்கை அமைச்சகம் மேற்பார்வையிடுகிறது. கடந்த ஆண்டின் முற்பகுதியில், லங்கா ஐ.ஓ.சி. பிஎல்சி மற்றும் இலங்கை அரசின் கீழ் வரும் சிலோன் பெற்றோலியம் கோர்ப்பரேன் ஆகியன இணைந்து டிரின்கோ பெற்றோலியம் டேர்மினல் என்ற கூட்டு முயற்சியை உருவாக்கின.

இதனையடுத்து குறித்த நிறுவனம் தனது வலையமைப்பை மேலும் 50 நிரப்பு நிலையங்களுடன் விரிவுபடுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திடம் இருந்து அண்மையில் அனுமதியை பெற்றுக்கொண்டது. இந்த நிலையில் இவர்கள் இருவரின் விஜயம் அமையவுள்ளது.

## 25 ஆயிரம் இராணுவத்தினர் பணியிலிருந்து வெளியேற்றம்

### சரத் பொன்சேகா தகவல்



கடந்த இரண்டு வருடங்களில் சுமார் 25 ஆயிரம் இராணுவத்தினரும் 1,000 பொலிஸாரும் பணியிலிருந்து விலகியுள்ளனர் என பீல்ட் மார்ல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை மீதான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போது அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் சுமார் 1,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பதவிகளைவிட்டு வெளியேறியுள்ளனர் எனவும், இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் சுமார் 200 பொலிஸ் அதிகாரிகள் பதவிகளை விட்டு விலகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தனியார் பஸ் மோதி மட்டு. பெண் இறப்பு

பேருந்து மோதிய விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு –மீகொழு–ம்பு பிரதான வீதியின் சத்துருக்கொண்டான் பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், உயிரிழந்தவர் அடையாளம் காணப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் சிக்கிய தனியர் சொகுசு பஸ் நேற்றிரவு 10 மணியளவில் மட்டக்களப்பில் இருந்து பயணித்த போது கொழும்பு பிரதான வீதியின் சத்துருக்கொண்டான் பகுதியில் பெண் ஒருவரை மோதித் தள்ளியது. மோதப்பட்ட பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் யார் என்று அடையாளம் காணப்படாத நிலையில் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# நாணய நிதிய வாய்ப்புகளை பயன்படுத்த ஒன்றிணைந்து செயற்பட முன்வாருங்கள்

## பிரதமர் தினேஸ் எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஒத்துழைப்புக்கான உறுதிப்பாட்டுடன் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எமக்கு புதிய கதவு திறக்கப்பட்டுள்ளது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்படுவது அவசியம் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை தொடர்பாக ஜனாதிபதியின் நாடாளுமன்ற உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

எமது நாட்டுக்கு அந்நிய செலாவணியைக் கொண்டுவருபவர்களும் ஏற்றுமதி துறையில் ஈடுபட்டுள்ளவர்களும் தற்போதைய நிலையில் அதிகமாக அதனைக் கொண்டு வருவதற்கு செயற்படுங்கள் என்றே கூறுகிறோம்.

கடந்த ஆறு மாதங்களில் எமக்கு அந்நிய செலாவணியாக 35 கோடியே 90 லட்சம் டொலர்கள் கிடைத்துள்ளன. அதனை மேலும் அதிகரிக்கச் செய்யுமாறு நாம் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான அனைத்து விடயங்களும் ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதனை நாம் வரவேற்கின்றோம்.

நெருக்கடியான, கடினமான நிலையில் நாடு தள்ளப்பட்டிருந்த காலகட்டத்தில் அதிலிருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக எமக்குக் கதவு திறக்கப்பட்டுள்ளது.

190 நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்புரிமையைப் பெற்றுள்ளன. அந்த நாடுகள் பல்வேறு கஷ்ட நேரங்களிலும் அதன் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன்படி எமது தெற்காசிய நாடுகளிலும் பல நாடுகள் அவ்வாறான உதவிகளைப் பெற்றுள்ளன.

கடந்த 7, 8 மாதங்களுக்கு முன்னர் நாடு மிக நெருக்கடியான நிலையை சந்தித்தது. எனினும் அவ்வாறான கடினமான காலத்திலும் நாம் எந்தவொரு அரசாங்க ஊழியரையும் பணியில் இருந்து நிறுத்தவில்லை.

அவர்களின் தொழில்களைப் பாதுகாக்கத் தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். என்றாலும் சிலர் பொருளாதாரக் கஷ்ட நிலையை போக்கிக்கொள்ள வேறு தொழில்களுக்காகத் தங்களின் தொழிலை விட்டுச்சென்றனர்.

அந்நிய செலாவணி தற்போது அதிகரித்து வருகின்றது. சுற்றுலாத்துறையினரின் வருகையும் அதிகரித்து வருகின்றது. இதன்மூலம் எமது நிதி இருப்பை அதிகரித்துக்கொள்ளவும், அதனுடன் தொடர்புடைய மக்களுக்கான வருமான அதிகரிப்பும் உருவாகும்.

அதேவேளை, சம்பள அதிகரிப்புக்களை மேற்கொள்ள முடியுமான சந்தர்ப்பத்தில் அதனை மேற்கொள்ள முடியும் என ஜனாதிபதி தமதுரையில் குறிப்பிட்டிருந்தார்.

நெருக்கடியான நிலையில் இருந்து மீண்டு வருகின்றோம். தற்போது திறக்கப்பட்டுள்ள புதிய கதவை வெற்றிகரமானதாக முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை ஆரம்பமாகக்கொண்டு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, பெரிஸ் கிளப் மற்றும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளும் எமக்கு உதவுவதற்கு முன் வந்துள்ளன.

இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்படுவது அவசியமாகும். நாடாளுமன்றத்தில் அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம் என ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளை அனைவரும் ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றேன்.

சில தரப்பினரால் முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் முற்றிலும் தவறானவை என்பதுடன் அது பொய்யாகியுமுள்ளது.

எனவே நெருக்கடியான நிலையிலிருந்து மீள்வதற்கான கதவு திறக்கப்பட்டுள்ளது. இது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமானதல்ல, நாட்டு என்றார்.

# ஆட்சியதிகாரங்களைக் கைப்பற்ற முயன்ற தரப்பின் நோக்கங்கள் தவிடுபொடியாகின

## சாந்த பண்டார பெருமிதம்



வங்குரோத்து அடைந்த நாடு தற்போது கட்டியெழுப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிகளை முன்னிறுத்தி, அரசாங்கத்தை பலவீனப்படுத்தி ஆட்சியதிகாரங்களை கைப்பற்றுவதற்கு முயற்சித்த எதிர்க்கட்சிகளின் நோக்கங்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சியின் குற்றச்சாட் டுக்களும்; உண்மையில்லை என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

இனியாவது நாட்டைப் பலப்படுத்துவது பற்றி சிந்தித்து நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப தனிநபர் என்ற ரீதியில் கட்சி, பேதங்களைக் கடந்து ஒன்றிணைய வேண்டும் என ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

இலங்கை வங்குரோத்து அடைந்துள்ளது என சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டது. பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டிருந்த நாட்டை அன்று எவரும் பொறுப்பேற்க முன்வரவில்லை. சிலர் பின்வாங்கினார்கள். இருப்பினும் எந்தவொரு நிபந்தினைகளுமின்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த சவாலை ஏற்றுக்கொண்டார்.

அவர் ஏற்றுக்கொண்ட பொறுப்பை சரிவர நிறைவேற்றியுள்ளார்.

வங்குரோத்து அடைந்த நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதியால் முடிந்துள்ளது. குழப்பங்களுக்கு மத்தியில் அன்று நாடாளுமன்றத்தில் நாம் எடுத்த தீர்மானம் சரியானது என்பதை நாட்டு மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர்.

அரசாங்கம் என்ற வகை யில் ஜனாதிபதியுடன் இணைந்து நாட்டின் நன்மை கருதி முக்கியமான தீர்மானங்களை முன்னெடுத்தோம்.

அதில் ஒன்று தான் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதியுதவி பெற்றுக் கொள்வது. நாம் அதற்காக முன்னெடுத்த நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு நாணய நிதியத்திடமிருந்து நிதியுதவியும் தற்போது கிடைக்கப் பெற்று இருக்கிறது.

எதிர்க்கட்சிகள் ஸ்திரத்தன்மை நிலையில் நாடு இல்லை என்பதால் நாணய நிதியத்தின் கடன் கிடைக்காது என்றார்கள்.

ஆனால் அந்த சவால்களை வெற்றி கொண்டுள்ளோம். நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்று மூச்சு விடுவதற்கு முடிந்துள்ளது. கிடைக்கப்பெற்ற நிதி கடன் என்றாலும் எமக்கு முன் னோக்கி செல்வதற்கான மாற்று பாதையாக இதைக்கருதுகிறோம்.

முன்னதாக நாணய நிதியத்திடமிருந்து 16 தடவைகள் கடன்களை பெற்றுள்ளோம். ஆனால் நாடு அபிவிருத்தி அடையவில்லை என்கிறார்கள். உண்மை தான். இருப்பினும் அவற்றை கொண்டு படிப்பினைகளைப் பெற்றுள்ளோம்.

அன்று கடனுக்கு முன்னதாக முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் முன்னெடுக்கப்படவில்லை. இருப்பினும் இம்முறை ஆரம்பத்திலேயே திருத்தங்களை மேற்கொண்டுள்ளோம். உதாரணமாக வரி திருத்தங்கள், மின் கட்டண உயர்வு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இந்தத் தீர்மானங்கள் நெருக்கடிகளை ஏற்படுத்தினாலும் எமக்கு இன்று சாதகமான பதிலைத் தந்துள்ளன.

இதேவேளை கடந்த காலங்களில்விட்ட தவறுகளைத் திருத்துவோம். நிதி ஒழுங்குகள் சட்டமாக்கப்படும். ஊழலைத் தடுக்க புதிய சட்டதிட்டங்களைக் கொண்டு வருவோம். முன்னர் இல்லாதது போன்று புதியதொரு நிதி கலாசாரம் உருவாகும்.

எதிர்காலத்தில் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. பொருளாதார நெருக்கடிகளைக் காரணங்களை காட்டி தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி ஆட்சிய திகாரங்களைப் பெற்றுக் கொள்ள முயன்ற எதிர்க்கட்சிகளின் கனவுகள் இல்லாது செய்யப்பட்டுள்ளன.

இனியாவது நாம் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பவும், பொருளாதாரத்தை உயர்த்தவும் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – என்றார்.

# பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்களுக்கு நிவாரணமளிக்குக

## எஸ்.எம்.மரிக்கார் கோரிக்கை



சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள நடுத்தர மக்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்துள்ளார்கள், ஆகவே, நிதியுதவி ஒத்துழைப்பைக் கொண்டு அரசியல் செய்வதை விடுத்து, பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதி ஆற்றிய விசேட உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டுள்ளதையிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசேட நன்றியை தெரிவித்துக் கொள்வது அவசியமற்றது, ஏனெனில் அவர் நிதியமைச்சர், அமைச்சுக்கான பொறுப்பை நிறைவேற்றியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தவறான தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலையடையப் போகிறது, ஆகவே சர்வதேச நாணய நிதியத்தை நாடுங்கள் என 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிட்டோம், எமக்கு பெரும்பான்மை உள்ளது, ஆகவே சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்ல வேண் டிய தேவை எமக்கு இல்லை என பொதுஜன பெரமுன வி னர் குறிப்பிட்டார்கள். தற்போது அவர்களின் மன நிலையை மாற்றி சர்வதேச நாணய நிதித்தின் ஒத்துழைப்பைப் பெற் றுக்கொண்டுள்ளதையிட்டு ஜனாதிபதிக்கு விசேட நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வதேச நாணய நிதிய ஒத்துழைப்பு மற்றும் இதனால் சமூகக் கட்டமைப்பில் தோற்றம் பெறும் மாற்றங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டும். தந்தை சூது விளையாடி குடும்பத்தின் பொருளாதாரத்தை இல்லாதொழித்த போது வீட்டின் உறுதிப்பத்திரத்தை தாய் வங்கியில் அடகு வைத்து கடனுக்கு விண்ணப்பம் செய்கிறார்,

குறித்த கடனை வழங்க வங்கி இணக்கம் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர்களின் பிள்ளைகள் பட்டாசு கொளுத்தி கொண்டாடுகிறார்கள், அவ்வாறான நிலையே சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை தொடர்ந்து வெடித்த பட்டாசுகளின் பின்னணியில் உள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ நாகத்தை காண்பித்து அரசியல் செய்தார், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைக் காண்பித்து அரசியல் செய்கிறார். நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் இன்றும் சுதந்திரமாக சுகபோகமாக வாழ்கிறார்கள், ஆனால் நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் சொல்லனா துயரங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு எரிபொருள், அத்தியாவசிய பொருள்கள் ஆகியவற்றின் விலை அதிகரிக்கப்பட்டது. மின்சார கட்டணம், வரி அதிகரிக்கப்பட்டது. தேசிய வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு புதிய வரி கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆகவே, சர்வதேச நாணய நிதியத்தின் 33 கோடி டொலர் முதல் தவணையை பெற்றுகொள்ள நடுத்தர மக்கள் முழுமையாக தங்களை அர்ப்பணித்துள்ளார்கள், ஆகவே முதல் கட்ட தவணையை கொண்டு நடுத்தர மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். – என்றார்.

# வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200 ஆண்டை முன்னிட்டு சைக்கிள் பவனி!







வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிகழ்வின் ஒரு பாகமாக வட்டுகோட்டை யாழ்ப்பாண கல்லூரியினரால் விசேட சைக்கிள் பவனி ஒன்று இன்று (வெள்ளிக் கிழமை) இடம்பெற்றது.

இன்று காலை 7 மணியளவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் யாழ். போதனா வைத்தியசாலையின் முன்பாக அமைந்துள்ள யாழ்ப்பாணகல்லூரி உயர்பட்டபடிப்புக்கள் பிரிவில் கல்லூரியின் அதிபர் ருஷிரா குலசிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

மத வழிபாடுகளோடு ஆரம்பமான நிகழ்வில் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 200 மரக்கன்றுகளை நாட்டும் செயற்திட்டத்தின் ஓர்அங்கமாக மூன்று மரக்கன்றுகள் யாழ்ப்பாணக் கல்லூரியின் உயர் பட்டபடிப்புக்கள் வளாகத்தில் நாட்டிவைக்கப்பட்டன.

தொடர்ச்சியாக கல்லூரியின் கொடிகளைத் தாங்கயவண்ணம் கல்லூரியின் ஆண் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தமது சைக்கிள் பவணியை ஆரம்பித்து கே.கே.எஸ். வீதியினூடாக கல்லூரியின் சகோதரத்துவ பாடசாலையான உடுவில் மகளீர் பாடசாலையை வந்தடைந்து தொடர்ச்சியாக கல்லூரியின் பெண் மாணவர்களையும் இணைத்துக் கொண்டு மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையை அடைந்து பின்னர் சண்டிலிப்பாய் சங்கானை சித்தன்கேணியினூடாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை சென்றடைந்தது.

இதன்பொழுது கல்லூரியின் அதிபர் ருஷிரா குலசிங்கம், கல்லூரியின் பிரதி அதிபர் ஏ.சி.பிரான்சிஸ், கல்லூரியின் உப அதிபர் கிளாடிஸ் முத்துராஜ், உடுவில் மகளீர் கல்லூரியின் அதிபர் மதுரமதி குலேந்திரன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றொர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மையறியும் பொறிமுறையில் தமிழர்கள் எங்கே?

உண்மையைக் கண்டறியும் பொறிமுறை ஒன்று தொடர்பில் நீண்டகாலமாகப் பேசப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 2015இல் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் முதல் இந்தப் பொறிமுறை குறித்த பேச்சு அடிபடுகின்றது.

அந்தத் தீர்மானத்தை அப்போது நாட்டின் தலைமை அமைச்சராக (பிரதமர்) இருந்தவரான ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்தே, இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றினர் என்றபோதும், அதில் கூறப்பட்டிருந்தவற்றை மைத்திரி –ரணில் கூட்டில் உருவான நல்லாட்சி என்று சொல்லப்பட்ட ஆட்சியில் நடைமுறைப்படுத்தவில்லை.

பன்னாட்டுச் சமூகத்தையும் ஐநாவையும் ஏமாற்றிய நிலையில் அதற்குப் பதிலாகக் காலத்தைக் கடத்தும் உத்தியோடு உண்மையைக் கண்டறியும் பொறிமுறை குறித்துப் பேசப்பட்டது. 7 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இப்போது அந்தப் பொறிமுறை குறித்து ஆராய்வதற்காக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்சவும் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரியும் தென்னாபிரிக்கா சென்றுள்ளார்கள்.

அங்கு உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை நடைமுறைப்படுத்திய முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து அவர்களின் அனுபவம் நடைமுறை குறித்துக் கேட்டறிந்து கொள்கிறார்கள். ஆனால், இந்தக் குழுவில் பாதிக்கப்பட்ட தரப்பைச் சேர்ந்த ஒரு தமிழர்கூடச் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பது கவனிக்கப்படவேண்டியது.

உண்மை அறியும் ஆணைக்குழுவை ஏற்பாடு செய்வதன் தேவையே தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் அல்லது நியாயம் சொல்லப்படவேண்டும் என்பதுதான். ஆனால் அத்தகைய பொறிமுறையை அறிந்துகொள்வதில் இருந்து தமிழர்கள் திட்டமிட்டு விலக்கப்பட்டுள்ளார்கள். சரி எதிர் வரிசையில் உள்ள தமிழ் அரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளை அழைத்துச் செல்லாததையாவது, ஒரு பேச்சுக்கு ஏற்றுக்கொண்டாலும் ஆட்சியிலேயே அங்கத்துவம் வகிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களையும் அதில் உள்ளடக்காததன் உள்நோக்கம் கூர்ந்து நோக்கப்படவேண்டியது

நீதியை நிலைநாட்டுவதில் தென்னாபிரிக்க மாதிரியை கொழும்பு தேர்ந்தெடுப்பதற்கு முக்கிய காரணம் ஒன்றுண்டு. அந்த மாதிரியில் தவறு செய்தவர்கள் அடையாளப்படுத்தப்பட்டபோதும் அவர்கள் எவரும் தண்டிக்கப்படவில்லை. அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இங்கும் தவறு செய்த தமது படையினரையும் தளபதிகளையும் தலைவர்களையும் தண்டிப்பதற்குத் தயாரில்லாத, அல்லது அதற்கு முதுகெலும்பில்லாத ஆட்சியாளர்கள் அந்த மாதிரியைத் தெரிவு செய்வதற்கு முன்வருவது ஆச்சரியமல்லை.

ஆனால், பாதிக்கப்பட்ட மக்களான தமிழ் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளாமல் அந்தப் பொறிமுறை வெற்றியளிக்கப்போவதில்லை. தமிழர்கள் அதனை ஏற்பார்களா இல்லையா என்கிற கேள்வியே ஆட்சியாளர்களிடம் கிடையாது என்பதைத்தான் தென்னாபிரிக்கப் பயணத்தில் ஒரு தமிழர்கூட இணைக்கப்படாத விடயம் சுட்டிக்காட்டுகின்றது. ஆட்சியாளர்களின் தெரிவாக இந்தப் பொறிமுறையும் தமிழர்கள் மீது திணிக்கப்படும்.

தென்னாபிரிக்காவில் பாதிக்கப்பட்ட தரப்பான கறுப்பின மக்களே அந்தப் பொறிமுறையைத் தேர்ந்தெடுத்தார்கள். அது அவர்களின் பெருந்தன்மை. ஆனால் இங்கு இனப்படுகொலையை நிகழ்த்தியவர்களே தங்களை மன்னிக்கும் வகையிலான பொறிமுறையத் தமிழர்கள் மீது தணிப்பதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைப்பது முட்டாள்தனம். தமிழர்களுடன் கலந்துரையாடப்படாமல் அவர்களின் இணக்கமின்றி உருவாக்கப்படும் எந்தவொரு பொறிமுறையும் இங்கு வெற்றியளிக்காது என்பதே யதார்த்தம்.

# பொருளாதார மீட்சிக்கு தடையான போராட்டங்களுக்கு இடமளியோம்

## அமைச்சர் காஞ்சன திட்டவட்டம்



ஊழல்மோசடிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில்தொழிற்சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பு போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

குறுகிய அரசியல் நோக்கத்துடன் செயற்படும் தொழிற்சங்கத் தலைவர்களின் நோக்கங்களுக்கு அரச சேவையாளர்கள் பலியாகக் கூடாது,பொருளாதார மீட்சிக்கான திட்டங்களுக்கு தடையான போராட்டங்களுக்கு இடமளிக்க முடியாது. நாட்டின் எதிர்காலத்துக்காக கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்படும் என மின்சாரத் துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதி ஆற்றிய விசேட உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து,அரசியல் முறைமைகளுக்கு அமைய அரசாங்கத்தைப் பொறுப்பேற்குமாறு பிரதான எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

சவால்களைப் பொறுப்பேற்கும் தைரியம் எதிர்க்கட்சிகளுக்கு இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், எமக்கும் இடையில் அரசியல் கொள்கை ரீதியில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் அவர் நாட்டுக்காகக் கடுமையான சவால்களைப் பொறுப்பேற்றார். அரசாங்கம் என்ற ரீதியில் பாரிய நெருக்கடியில் இருந்து மீண்டுள்ளோம்.

அத்தியாவசிய சேவை கட்டமைப்பைத் தடையின்றி விநியோகிப்பதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானங்களை சர்வதேச நாணய நிதியம் உட்பட சர்வதேசம் வரவேற்றுள்ளது.

நெருக்கடியான நிலையில் இருந்து மீள்வதற்கு இதுவொரு சிறந்த எடுத்துக் காட்டு என சுட்டிக்காட்டியுள்ளன. நாட்டின் எதிர்காலத்தை சுபீட்சமாக்கும் பல சிறந்த நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ளது.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது அத்தியாவசியமானது, அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதை தொழிற்சங்கத்தின் காட்டிக் கொடுப்பு செயல் எனக் குறிப்பிடுகிறார்கள்.

தேசிய வளங்களின் உச்ச பயனைபெற்றுக்கொள்ளாமல் தேசிய வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டுக் கொண்டுளந்த நடவடிக்கையும் முன்னெடுக்காமல் இருப்பதால் எவருக்கும் எவ்வித பயனும் கிடையாது.

திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பில் ஆட்சியில் உள்ள அனைத்து அரசாங்கங்களும் விசேட கவனம் செலுத்தியுள்ளன. இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள 14 எண்ணெய் குதங்கள் ஊடாக இந்திய நிறுவனம் இலாபம் பெறுகின்றன மறுபுறம் எண்ணெய் தாங்கிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

மறுபுறம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான எண்ணெய் தாங்கிகள் அபிவிருத்தி செய்யப்படவுமில்லை, வருமானம் கிடைக்கப் பெறவுமில்லை.

சிறந்த கொள்கைத் திட்டத்துக்கு அமைய திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் வெளிநாட்டு அபிவிருத்தி செயற்திட்டங்களுடன் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தால் தென்னாசிய வலயத்தில் இலங்கை எரிபொருள் விநியோககத்தில் கேந்திர மையமாக மாற்றமடைந்திருக்கும்.

எரிபொருள் மற்றும் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளமையின் பெறுபேறு அரசாங்கத்துக்கு அரசியல்ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நாம் நன்கு அறிவோம். நெருக்கடியான சூழ்நிலையில் தான் எரிபொருள், மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டன.

நாட்டை முழுமையாக நெருக்கடிக்குள்ளாக்கி, அராஜகரமான சூழலில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தொழிற்சங்கத்தினர் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

தொழிற்சங்கத்தினர் 23,24 மற்றும் 25 ஆகிய திகதிகளில் போராட்டங்களில் அல்லது பணிபுறக்கணிப்பில் ஈடுபடுவதில்லை. ஏனென்றால் இந்த திகதிகளில் போராட்டத்தில் ஈடுபட்டால் தமது சம்பளம் கிடைப்பதில் பாதிப்பு ஏற்படும் என்பதை அறிவார்கள்.

புதிய வரி கொள்கைக்கு உள்ளாகாத ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். ஜோசப் ஸ்டாலின், ஜாசிங்க ஆகியோர் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக ஒட்டு மொத்த ஆசிரியர், அதிபர்களை பலியாக்குகிறார்கள். இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபத்தினர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதாகக் குறிப்பிடுகிறார்கள்.

எரிபொருள் விநியோகக் கட்டமைப்பில் போட்டித்தன்மையை ஏற்படுத்த வெளிநாட்டு நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கும் திட்டத்துக்கு பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றன.

அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படுவதால் எவரது தொழில் உரிமையும் பாதிக்கப்படாது.

மக்களுக்கான சேவை வினைத்திறனான முறையில் முன்னெடுக்கும் மறுசீரமைப்புக்கள் மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையிலான போராட்டங்களுக்கு இடமளிக்க முடியாது, குறுகிய அரசியல் நோக்கத்துக் காக போராட்டங்களில் ஈடுபடும் தொழிற்சங்கங்கத் தலைவர்களின் கட்டளைகளுக்கு அடிபணிந்து செயற்படுவதை அரச சேவையாளர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பணிபுறக்கணிப்பால் அரச வருமானத்தை பாதிப்புக்குள்ளாக்கியுள்ளோம் என தொழிற்சங்கத் தலைவர்கள் பெருமிதம் கொள்கிறார்கள். இவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கன் எயார் லைன் நிறுவனம், ரெலிகொம் நிறுவனம் உள்ளிட்ட பல நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படும். எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் பெற்றோலிய கூட்டுத்தாபனம் இலாபமடைகிறது.

ஆகவே, நிறுவனத்தை மறுசீரமைக்க வேண்டாம் என ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். இலாபம் அடைவதற்காக மறுசீரமைக்காமல் இருக்க முடியாது. நட்டமடையும் அரச நிறுவனங்கள் நிச்சயம் மறுசீரமைக்கப்படும்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பௌஸர்களுக்குஜி.பி.எஸ். இயந்திரம் பொருத்துவதற்கு தொழிற்சங்கத்தினர் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

ஒரு லீற்றர் எரிபொருளில் ஒன்றரை கிலோமீற்றர் தூரம் பயணம் செய்வதாக சாரதிகள் புத்தகத்தில் பதிவு செய்துள்ளார்கள், ஆனால் ஜி.பி.எஸ். இயந்திரத்தில் ஒரு லீற்றர் எரிபொருளில் 4 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்ய முடியும் எனக் காட்டுகிறது.

இந்த விடயத்தில் பாரிய மோசடி இடம்பெறுகிறது, இதற்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கும் போது தொழிற்சங்கத்தினர் தொழில் உரிமை, அரச வளங்களை விற்றலுக்கு எதிர்ப்பு எனக் குறிப்பிட்டுக் கொண்டு பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகிறார்கள், ஆகவே, இவ்வாறான செயற்பாடுகளுக்கு இனி இடமளிக்க முடியாது. – என்றார்.

# தேர்தலைப் பிற்போட்டது தொடர்பாக வெளிநாட்டு துதர்களுடன் பேசினோம்

## லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகிறார்



வெளிநாட்டு தூதுவர்களை நாங்கள் தனித்து சென்று சந்திக்கவில்லை. எங்களுடன் மொட்டு கட்சியில் போட்டியிட்டவர்கள் உட்பட கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருந்தனர்.

தேர்தலை பிற்போடுவது தொடர்பாகவே நாங்கள் கலந்துரையாடினோம் என எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி பிரதமகொறடா பிரசன்ன ரணதுங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிக்கையில் –

எதிர்க்கட்சி தலைவர் உட்பட சிலர் வெளிநாட்டு தூதுவர்களை கொழும்பு கிளப்பில் சந்தித்து கலந்துரையாடி இருக்கின்றனர்.

இதன்போது சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வழங்குவதை நிறுத்த வேண்டும் அல்லது கடும் நிபந்தனைகளுடன் வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளனர் என ஊடகவியலாளர் ஒருவர் எனக்குத் தெரிவித்தார்.

அதன் உண்மைத் தன்மை எனக்கு தெரியாது. அதனால் இவ்வாறு செய்ய வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன். – என்றார்.

இதற்கு லக்ஷ்மன் கிரியெல்ல தொடர்ந்து பதிலளிக்கையில் –

வெளிநாட்டுதூதுவர்களைநாங்கள் சந்தித்தோம், ஐக்கிய மக்கள் சக்தியினர் மாத்திரமல்ல, மொட்டு சின்னத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றம் வந்தவர்கள் உட்பட கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எம்முடன் இருந்தனர்.

இதன் போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டிருப்பது தொடர்பாக நாங்கள் கதைத்தோம். அதில் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. ஏனெனில் ஐ.சீ.சீ.பீ.ஆர். நாடாளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஐ.சீ.சீ.பீ.ஆர் 25 ஆவது சரத்தின் கீழ் உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கான சட்ட திருத்தங்களை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவருமாறு நாங்கள் ஆரம்பத்தில் இருந்து அரசாங்கத்துக்கு தெரிவித்து வருகிறோம்.

அவ்வாறு கொண்டுவந்தால் அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றத்தர நாங்கள் தயார் எனவும் நாங்கள் பல தடவைகள் இந்த சபையில் குறிப்பிட்டிருக்கிறோம்.

அத்துடன் விகிதாசாரத் தேர்தல் முறைமையில் தேர்தலை நடத்துவதாக இருந்தால் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றம் ஆகிய இரண்டு தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்த முடியுமாக இருந்தால் அதற்கும் நாங்கள் தயார். – என்றார்.

# சகோதரியின் நகையைத் திருடி மோசடியில் ஈடுபட்ட நபர் கைது!

யாழ்ப்பாணத்தில் சகோதரியின் நகையைத் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கைது நடவடிக்கை வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பெண்ணொருவர் தனது வீட்டிலிருந்த 5 பவுண் நகை திருடப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் பிரகாரம் குறித்த பெண்ணின் சகோதரன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் போதைப்பொருளுக்கு அடிமையாகி சிறைத்தண்டனை அனுபவித்து தற்போது விடுதலையாகியுள்ள நபர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் சந்தேகநபரிடமிருந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நகையைத் திருடி அடகு வைத்து அந்தப் பணத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றை வாங்கியுள்ளார் என வாக்குமூலம் அளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தீவிர எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களால் பிரான்ஸில் இயல்பு நிலை பாதிப்பு

## மாபெரும் பேராட்டங்களால் முழு நாடும் அதிர்கின்றது

(பாரிஸிலிருந்து குமாரதாஸ்)

பிரான்ஸில் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வீதிப் பேரணிகள் காரணமாக நாட்டில் இயல்பு நிலை பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளது.எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகங்கள் சீர்குலையும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது

அரசுத் தலைவர் மக்ரோன் ஓய்வூதியச் சட்டம் தொடர்பாக வழங்கிய தொலைக் காட்சி நேர்காணலுக்குப் பின்னர் எதிர்ப்பாளர்களது முக்கிய இலக்காக மாறியிருக்கிறார்.

நாடளாவிய ரீதியில் வியாழக்கிழமை நடைபெற்ற போராட்டங்களில் ஆத்திர உணர்வும் வன்முறைப் போக்கும் மேலோங்கிக் காணப்பட்டது.

ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபட்ட பொலீஸ் மற்றும் ஜொந்தாம் படையினர் 149 பேர் காயமடைந்தனர் என்றும் வன்முறையில் ஈடுபட்ட 172 பேர் நாடெங்கும் கைது செய்யப்பட்டனர் எனவும் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேசமயம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலீஸ் வன்முறைகள் இடம்பெறுவதாக வெளியான செய்திகளை அடுத்து தேவையற்று பலத்தைப் பயன்படுத்தவேண்டாம் என்று சர்வதேச மன்னிப்புச் சபை அரசு அதிகாரிகளைக் கேட்டிருக்கிறது.

தென்மேற்கு நகரமான போர்தோவில் (பெலிஸ்-எழிற்மு) வியாழன் இரவு நகர மண்டபத்தின் முன்பாகக் கலகம் அடக்கும் படையினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்றன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரு கட்டத்தில் நகரசபை மண்டபத்தின் நுழைவாயில் கதவுக்குத் தீ மூட்டப்பட்டது. புகழ்பெற்ற மண்டப வாயில் தீப்பற்றி எரிகின்ற காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியாகின.

தீயணைப்புப் படையினர் விரைந்து தீயை அணைத்துவிட்டனர்.

மக்ரோன் அரசு அரசமைப்பின் 49.3 பிரிவைப் பயன்படுத்தி ஓய்வூதியத் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்ற வழிமுறைகளை மீறி நிறைவேற்றியதால் ஆத்திரமடைந்த மக்கள் தங்களது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக மாபெரும் போராட்டங்களில் அணி திரண்டு பங்கேற்றுவருகின்றனர். இன்னொரு புறத்தில் பொலிஸார் மற்றும் பொதுச் சொத்துகள் மீதான வன்முறையும் தீவிரமடைகின்றது.








நாடெங்கும் உருவாகியுள்ள அமைதியின்மையை அடுத்து அரசுத் தலைவர் மக்ரோன் அது தொடர்பாகத் தொலைக்காட்சிக்கு அளித்த விசேட செவ்வியில், மக்களது நியாயமான கோரிக்கைக்குச் செவி சாய்க்காமல், ஓய்வூதியச் சட்டத்தின் அவசியம் பற்றியும் அதிலிருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை என்றவாறும் கருத்துக்களை அள்ளி வீசி எறிந்து எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியுள்ளார் என்று கண்டனங்கள் எழுந்துள்ளன. அதன் எதிரொலியாக நேற்றைய பேரணிகளில் ஓய்வூதியத் திருத்தச் சட்டத்தை விடவும் மக்ரோன் எதிர்ப்புக் முழக்கங்களே அதிகம் ஒலித்தன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று வியாழக்கிழமை நாடெங்கும் இருநூறுக்கும் மேற்பட்ட இடங்களில் நடந்த பேரணிகளில் சுமார் 35 லட்சம் பேர் (3.5 துஷ்யியிஷ்லிஜ்) திரண்டனர் என்று தொழிற்சங்கங்கள் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மார்ச் 7 நடந்த பேரணிபோன்று இந்தஎண்ணிக்கைமிகஉச்ச அளவு என்று தொழிற்சங்கத் தலைவர்கள் வியந்து கருத்து வெளியிட்டுள்ளனர்.

அரசுத் தரப்பில் உள்துறை அமைச்சு வெளியிட்ட புள்ளி விவரம் வியாழக்கிழமை பேரணிகளில் நாடு முழுவதும் பத்து லட்சம் பேரே (1.089 துஷ்யியிஷ்லிஜ்) பங்குபற்றினர் என்று குறைத்து மதிப்பிட்டுள்ளது. பாரிஸில் வியாழக்கிழமை பேரணிகள் நடந்த இடங்களில் மிக அதிக எண்ணிக்கையானவர்கள் திரண்டிருந்தனர். சுமார் பத்து லட்சம் பேர் பாரிஸில் மட்டுமே பங்கேற்றனர் என்று தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இதேவேளை - பத்தாவது எதிர்ப்பு நாளாக மார்ச் 28 செவ்வாய்க்கிழமையை - பிரிட்டிஷ் மன்னர் மூன்றாவது சார்ள்ஸ் பாரிஸுக்கு விஜயம் மேற்கொள்கின்ற தினத்தைத் தொழிற்சங்கங்களது கூட்டமைப்பு அறிவித்திருக்கிறது. அன்றைய தினம் வீதிப் பேரணிகளும் வேலை நிறுத்தங்களும் தீவிரமாக முன்னெடுக்கப்படவுள்ளன.

பிரான்ஸின் அரசமைப்பின் 49.3 ரத்தின் கீழ் அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் தோல்வியடைந்ததை அடுத்து அதே அரசமைப்பு விதிகளின் கீழ் ஓய்வூதியத் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு இன்றியே நிறைவேறியிருப்பதாக அறிவிக்கப்பட்டது. சர்ச்சைக்குரிய சட்டமூலம் நாட்டின் அரசமைப்பின் கீழ் தற்சமயம் சட்டமாக்கப்பட்டுவிட்டது. இதுவே எதிர்ப்புப் போராட்டங்கள் மேலும் தீவிரமடைவதற்குக் காரணம்.

# எம்.பி. பதவியை இழந்தார் ராகுல்

இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ராகுல் காந்தி அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் மோடியை அவதூறாகப் பேசிய வழக்கில், ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து குஜராத்தின் சூரத் நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கியது. இதையடுத்து, குற்றவியல் வழக்கில் 2 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் தண்டனை பெறுபவர்கள் மக்கள் பிரதிநிதியாகத் தொடர முடியாது எனும் சட்டத்தின் கீழ், ராகுல் காந்தி தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.


இந்திய நாடாளுமன்றத் தேர்தலின்போது, கர்நாடகாவின் கோலார் பகுதியில் 2019 ஏப்ரல் 13 நடந்த கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, ஏன் அனைத்து திருடர்களும் மோடி என்ற குடும்பப் பெயரையே கொண்டுள்ளனர்? நீரவ் மோடி, லலித் மோடி, நரேந்திர மோடி என்று எல்லா திருடர்களின் பெயர்களும் மோடி என்றே முடிவது ஏன்? என்று விமர்சித்திருந்தார்.

இது தொடர்பாக குஜராத்தை சேர்ந்த பாஜக எம்எல்ஏ பூர்னேஷ் மோடி, சூரத் தலைமை நீதித் துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ராகுல் காந்தி மீது அவதூறு வழக்குத் தொடர்ந்தார். இந்திய குற்றவியல் சட்டம் 499, 500 ஆகிய பிரிவுகளின் கீழ் ராகுல் காந்தி மீது விசாரணை நடைபெற்றது. 2021 ஜூன் மாதம் ராகுல் காந்தி நீதிமன்றத்தில் ஆஜராகி, விளக்கம் அளித்தார். சுமார் 4 ஆண்டுகள் நீடித்த இந்த வழக்கில் மார்ச் 23 தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதையடுத்து, ராகுல் காந்தி உள்ளிட்டோர் சூரத் தலைமை நீதித் துறை நீதிவான் மன்றத்தில் நேற்று ஆஜராகினர். அனைத்துத் தரப்பினரும் ஆஜரான நிலையில் தீர்ப்பை வாசித்த நீதிவான் வர்மா, காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி குற்றவாளி என்று தீர்ப்பளித்தார்.

நீதிவான் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.15,000 அபராதமும் விதித்தார். இதையடுத்து, ராகுல் காந்தி தரப்பில் பிணைக்கு விண்ணப்பிக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட நீதிவான் வர்மா, 30 நாள் பிணை வழங்கி, அதுவரை தண்டனையை நிறுத்திவைக்க உத்தரவிட்டார்.

இந்த தீர்ப்பை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வோம். நீதித் துறையின் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்றார். ராகுல் காந்தி தனது ட்விட்டர் பதிவில், எனது மதம் உண்மை, அகிம்சையை அடிப்படையாகக் கொண்டது. உண்மையே எனது கடவுள். அகிம்சை அதை அடையும் வழி. இது காந்தியடிகளின் பொன் மொழி என்று தெரிவித்திருந்தார்.



இந்நிலையில், இந்த வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ராகுல் காந்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மக்களவை செயலாளர் உத்பல் குமார் சிங் வெளியிட்டுள்ள அறிவிக்கையில், "குற்றவியல் வழக்கில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்திக்கு எதிராக சூரத் நீதிமன்றம் 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து வியாழக்கிழமை தீர்ப்பளித்துள்ளது. எனவே கேரளாவின் வயநாடு தொகுதி மக்களவை உறுப்பினர் எனும் நிலையில் இருந்து ராகுல் காந்தி தகுதிநீக்கம் செய்யப்படுகிறார். அவரது தகுதி நீக்கம் தீர்ப்பு வெளியான நாளில் இருந்தே நடைமுறைக்கு வந்துள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து சட்ட நிபுணர்கள் கூறும்போது, ராகுல் வழக்கில், அவர் உச்ச நீதிமன்றம் வரை மேல்முறையீடு செய்ய முடியும். ஒருவேளை உச்ச நீதிமன்றமும் அவர் குற்றவாளி என்று தீர்ப்பளித்தால், கண்டிப்பாக 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும். அவர் விடுதலையான நாள் முதல் 6 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என்றனர்.

# ரேடியோ ஆக்டிவ் சுனாமியை சோதித்து வடகொரியா வெற்றி

கடலுக்கு அடியில் ரேடியோ ஆக்டிவ் சுனாமியை ஏற்படுத்தும் பரிசோதனையை வெற்றிகரமாக நடத்தியதாக வட கொரியா அறிவித்துள்ளது.

வட கொரியாவின் தென் பகுதியில் உள்ள ஹம்க்யோங் மாகாணத்தில் கடலுக்கு அடியில் இரகசிய ஆயுதத்தை செலுத்தினோம். இது 80 முதல் 150 மீற்றர் ஆழத்தில் 59 மணி நேரத்திற்கும் மேலாகப் பயணித்து அதன் கிழக்கு கடற்கரையில் வெடித்தது . இதன் மூலம் ரேடியோ ஆக்டிவ் சுனாமியை ஏற்படுத்தினோம் என்று வட கொரியா தெரிவித்துள்ளது.



இந்தச் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதால் வட கொரிய அதிபர் கிம் மகிழ்ச்சி அடைந்துள்ளார் என்று வட கொரிய அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. ஆனால், இந்தச் சோதனையில் எந்தவிதமான ஆயுதத்தை வட கொரியா பயன்படுத்தியது என்பது தெரிவிக்கப்படவில்லை.

வட கொரியாவின் இந்த பரிசோதனை காரணமாக கொரிய தீபகற்ப பகுதியில் பதற்றம் நிலவுகிறது. மேலும், இந்தப் பரிசோதனையை தென் கொரியா கடுமையாக விமர்சித்துள்ளது. இது குறித்து தென் கொரிய அதிபர் யுன் சுக் யோல் கூறும்போது, இம்மாதிரியான ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளுக்கான விலையை வட கொரியா கொடுக்க நேரிடும் என்றார்.

ரேடியோ ஆக்டிவ் சுனாமி என்றால் என்ன? கடலுக்கு அடியில் அணு ஆயுத ஏவுகணைகளை செலுத்தும்போது, அவை குறிப்பிட்ட தூரம் பயணித்து பின்னர் கடலில் வெடித்துச் சிதறும். அப்போது ரேடியோ ஆக்டிவ் அலைகள் ஏற்படும். இவையே சுனாமி அலைகள் என்று அழைக்கப்படுகிறது.

அமெரிக்க - தென் கொரிய படைகள் கொரிய தீபகற்பத்தில் கடந்த சில நாட்களாக படைத் துறைப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும், இம்மாத இறுதியில் இரு நாடுகளும் மிகப் பெரிய படைப் பயிற்சிக்கு திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில், வட கொரியா மீண்டும் ஆயுத சோதனையை நடத்தியுள்ளது. 2022 தொடக்கத்தில் இருந்து வட கொரியா 10க்கும் அதிக மான ஏவுகணை சோதனைகளை நடத்தியுள்ளது. வட கொரியாவின் இந்த நடவடிக்கை உலக நாடுகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக வட கொரியாவின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதைச் சரி செய்வதில் கவனம் செலுத்தாமல் ஏவுகணைகளை மேம்படுத்துவதிலேயே அந்நாடு கவனம் செலுத்துவதாக ஐ.நா. கடந்த ஆண்டு கண்டித்திருந்தது.

இதற்காக வட கொரியா மீது பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையிலும், வட கொரியா ஆயுதப் பரிசோதனைகளைத் தொடர்ந்து வருகிறது.

# சாதனைத் தாடி

ஸ்வீடனை சேர்ந்த பிர்ஜெர் பெலாஸ் என்பவர் 5 அடி 9 அங்குலம் நீளத்துக்குத் தாடி வளர்த்ததற்காக கின்னஸ் உலக சாதனையாக இருந்து வந்தது. இந்தச் சாதனையை 2008ஆம் ஆண்டு கனடாவில் வசிக்கும் சீக்கியர் சர்வன் சிங் முறியடித்தார். அப்போது அவரது தாடியின் நீளம் 7 அடி 8 அங்குலமாக இருந்தது. அதன்பின் 2010ஆம் ஆண்டில் இவரது தாடியை இத்தாலியில் நடந்த நிகழ்ச்சியில் அளந்தபோது அது 8 அடி 2.5 அங்குலமாக வளர்ந்திருந்தது.

கடந்தாண்டு ஒக்டோபர் 15 சர்வன் சிங் தாடியை அளந்தபோது அது 8 அடி 3 அங்குலமாக இருந்தது. ஆனால் முன்பு இருந்ததைவிட, தாடி தற்போது நரைத்த நிலையில் உள்ளது.

இதுகுறித்து சர்வன் சிங் கூறுகையில், "நான் 17 வயது முதல் தாடியை வளர்த்து வருகிறேன். ஒருபோதும் வெட்டியதில்லை. சீக்கியராக இருப்பதில் தாடி முக்கியமான அம்சங்களில் ஒன்று. இந்த தாடியை கடவுளின் பரிசாகக் கருதுகிறேன்" என்றார்.





காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நாட்டின் நடுத்தர மக்கள் மீது முழுமையாக பொருளாதாரச் சுமை சுமத்தப்பட்டுள்ளது

## விஜித ஹேரத் சாடல்



நாட்டை வங்குரோத்து நிலைக்குதள்ளியவர்கள்சுகபோகமாக வாழ்கின்ற நிலையில் பொருளாதார சுமை நடுத்தர மக்கள் மீது முழுமையாக சுமத்தப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு சமூகக் கட்டமைப்பில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதி ஆற்றிய விசேட உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை வங்குரோத்து நாடு என நாட்டு மக்கள் அறிவிக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பொருளாதாரப் பாதிப்பைத் தீவிரப்படுத்தி, இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்து விட்டது என அறிவித்தது.

பெற்றுக்கொண்ட அரச முறை கடன்களை மீள செலுத்த முடியாமல், வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டோம் என அரசாங்கம் 2022.04.12 அன்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

இலங்கை ஓர் ஏழ்மையான குறைந்த வருமானம் பெறும் நாடு என அமைச்சரவை அறிவித்தது. சர்வதேசநாணயநிதியத்தின்முதல்தவணைதொகைகிடைக்கப் பெற்றவுடன் 'வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுவிட்டோம்' என அரசாங்கம் குறிப்பிடுகிறது. 'வங்குரோத்து'எனஅரசாங்கம் அறிவித்தது, 'வங்குரோத்து நிலையில் இருந்துவிட்டோம்' என அரசாங்கம் அறிவிக்கிறது, இதில் நாட்டு மக்களுக்கு எவ்வித தொடர்பும் கிடையாது.

தேசிய உற்பத்தித் துறைக்கு மதிப்பளிக்காமல் இறக்குமதி துறைக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கியதன் காரணமாக நாடு வங்குரோத்து நிலையை அடைந் தது.

தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டுள்ளதையிட்டு பெருமை கொள்வதை காட்டிலும் வெட்கப்பட வேண்டும். பட்டாசு வெடித்து கொண்டாடுவதை விடுத்து இந்த நிலை ஏன் ஏற்பட்டது என்பதை தற்போது கொண்டாடுபவர்கள் சிந்திக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னாள் நிதியமைச்சர் பஸில்ராஜபக்ஷமுன்னெடுத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அப்போது எதிர்க்கட்சி உறுப்பினராகப் பதவி வகித்தார். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கடந்த ஆண்டு சர்வகட்சி தலைவர் கூட்டம் இடம் பெற்றது. இதன்போது சர்வதேச நாணயநிதியத்தின்ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் என்னென்ன? அவற்றை நாட்டுமக்களுக்கு அறிவியுங்கள் என ரணில் விக்ரமசிங்க அப்போதைய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் குறிப்பிட்டார். இதற்கு பஸில்ராஜபக்ஷ ஆத்திரமடைந்து 'நிபந்தனைகளை குறிப்பிடப் போவதில்லை' என்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அரசாங்கம் முறையாகவும் தெளிவாகவும் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவில்லை. இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்பு வெளிப்படைத் தன்மையுடன் காணப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அழுத்தமாக குறிப்பிட்டதன் பின்னரே அரசாங்கம் குறித்த அறிக்கையை தெளிவற்ற வகையில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ளது.

எரிபொருள், அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றம், மின்கட்டண அதிகரிப்பு ஆகியன சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கமைய மேற்கொள்ளப்படவில்லை என அரசாங்கம் குறிப்பிட்டது.

ஆனால், தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 154 நிபந்தனை அறிக்கையில் 107, 108 மற்றும் 109 ஆகிய பக்கங்களில் நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் நிபந்தனைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

தவறான பொருளாதார கொள்கையினால் நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளி, நாட்டு மக்களை முழுமையாக இல்லாதொழிக்கும் வகையில் பஸில் ராஜபக்ஷ ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தற்போது செயற்படுத்துகிறார்.

ஆகவே, சர்வதேச நாணய நிதியத்தைக் குறைகூற முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை இலங்கை 16 தடவைகள் பெற்றுக்கொண்ட பின்னணியில் தான் வங்குரோத்து அடைந்தது. தற்போது 17 ஆவது தடவையாக நிதியுதவி ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த ஒத்துழைப்பு சமூகக் கட்டமைப்பில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறோம். – என்றார்.

# ஹஜ் யாத்திரைக்காக வழங்கப்படும் விசா விற்பனை செய்ய இடமளிக்கப்படமாட்டாது

## அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவிப்பு



புனித மக்காவிற்கு ஹஜ் யாத்திரை மேற்கொள்வதற்காக வழங்கப்படும் விசாக்கள்கடந்தவருடங்களைப்போன்று விற்பனை செய்ய இடமளிக்கப்படமாட்டாது என்று புத்தசாசன கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு முரணாக யாரேனும் செயற்படுவார்களாயின் உடனடியாக அமைச்சுக்கு அறிவிக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களத்தின் முதன்முறையாக ஹஜ் விடயங்களை கவனிப்பதற்காக தனியானதொரு ஹஜ் விவகார அலுவலகமொன்று புத்தசாசன கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர், விதுர விக்கிரமநாயக்க விஜுல் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில், இலங்கைக்கு கிடைக்கும்விசாக்கள்பலலட்சங்களுக்கும் விற்பனை செய்யப்பட்டன. அவ்வாறான மோசடிகளைத் தடுப்பதற்காகவே இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஹஜ் யாத்திரைக்காக செல்லும் முஸ்லிம்களுக்கு நியாயமான சேவைகளை வழங்குவதே தனது நோக்கம். இம்முறை இலங்கை முஸ்லிம்களுக்காக 3500 விசாக்கள் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

# இலங்கையில் சமூக– பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஜப்பான் நிதியுதவி!

*இலங்கையில் சமூக - பொருளாதார நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மனிதாபிமான உதவிக்காக ஜப்பான் அரசாங்கம் 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐக்கிய நாடுகளின் பெண்கள் அமைப்புக்கு வழங்கியுள்ளது.*

*இந்த நிதி, 'நெருக்கடியில் உள்ள பெண்களை வலுவூட்டல்' என்ற புதிய செயற்திட்டத்தின் ஒரு பகுதியென்பதுடன், இது பெப்ரவரி 2023 முதல் டிசெம்பர் 2023 வரை செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், இது பாலின மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை எதிர்கொண்ட குறைந்தது 1,200 பெண்கள் உட்பட அவர்களின் குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இது வீழ்ச்சியடையும் அபாயத்தில் உள்ள 500 பெண்கள் லைமையிலான நுண் நிறுவனங்களுக்கும், வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டின் அபாயத்தில் உள்ள 2,000 நபர்களுக்கும் மேலும் ஆதரவளிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# சூர்யா வர்த்தக நாமத் தூதுவராக திரை நட்சத்திரம் யசோதா நியமனம்



பிரபல வர்த்தக நாமமான, சூர்யா வை உற்பத்தி செய்யும் சன் மட்ச் நிறுவனம் கடந்த 40 வருடங்களாக மக்களின் நம்பிக்கையை வென்றுள்ளதோடு தற்போது தனது வர்த்தகநாமத்தூதுவராக இலங்கையின் பிரபல நடிகை யசோதா விமலதர்மாவை நியமித்துள்ளது.

இந்த மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையானது இவ்வர்த்தக நாமத்தின் பிரசன்னத்தை விரிவாக்குவதையும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதையும் நேநாக்கமாகக் கொண்டது. சினிமாத் துறையில் யசோதாவுக்கு இருக்கும் பெயரும், புகழும், நல்லெண்ணமும் இதனை ஊக்குவிக்க உதவுவதுடன், வர்த்தக நாமத்தை வளர்த்தெடுக்கவும் வாடிக்கையாளருடனான உறவை வலுப்படுத்தவும் 40 ஆண்டுகளாக நிறுவனம் கட்டியெழுப்பிய நம்பிக்கையையும் விசுவாசத்தையும் மீள நிறுவவும் உதவும்.

சந்தையில் மரத்தாலான தீக்குச்சிகள் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் தொழில் முனைவாளர் டி.ஆர்.ராஜனால் மெழுகினாலான தீக்குச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தற்போது தமது முற்றுமுழுதான தானியங்கும் விற்பனை மற்றும் விநியோக வலையமைப்பின் மூலம் சந்தையில் முன்னணி வர்த்தக நாமமாகவுள்ளது. இந்த வர்த்தக நாமமானது 14 தனித்துவமான வாசனைகளைக் கொண்ட ஊதுபத்தி வரிசையை சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு வீட்டையும் ஒளிரச் செய்வதில் நாம் அக்கறையோடு இருக்கும் அதேவேளை எமது மெழுகு சிந்தாத மெழுகுவர்த்திகள் பல சாதனைகளைச் செய்யும்.

யசோதா பாரம்பரிய மற்றும் தற்கால அழகின் கலவையாக விளங்குகிறார். இது எங்கள் வர்த்தக நாமத்தை பிரதிநிதித்துவப்படுத்த பொருத்தமானதாக இருக்கும் என்று நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் நிறுவுனரின் மகளுமான கௌரி ராஜன் தெரிவித்தார்.

விருது வென்ற திரைப்பட நடிகையான யசோதா, களணி பல்கலைக்கழகத்தின் ஹிந்திப்பாட பட்டதாரியும், லக்னோ பல்கலைக்கழகத்தில் இருந்து முதுமாணி பட்டம் பெற்றவருமாவார். கடந்த வாரம் இந்தயாவில் நடைபெற்ற ஆசிய பெண்களுக்கான விருது வழங்கும் விழாவில் பங்குபற்றி விட்டு திரும்பிய யசோதா தனது புதிய பங்குடமை பற்றிப் பேசினார்.

சூர்யா பத்திகள் எனது வாழ்வுடன் ஆழமாக பின்னிப் பிணைந்திருக்கிறது. நம்பிக்கை, பெறுமதி என்பனவற்றை எனது வாழ்வுக்கு வழங்கியிருக்கிறது. சூர்யா வர்த்தக நாமத்துடன் கைகோர்த்திருப்பது மகிழ்ச்சி தருகின்றது. நான் எப்போதும் என் ஆன்மாவுக்கும் உளநம்பிக்கைகளுக்கும் உண்மையாக இருக்கவேண்டும் என்று விரும்புவேன். எனது கோட்பாடுகளை ஒத்திருக்கும் வர்த்தக நாமத்துடன் இணைவதில் மகிழ்ச்சி. அதனை ஊக்குவிக்க பாடுபடுவேன் என்றார்.

யசோதாவுக்கும் சன் மட்ச் கம்பெனியின் நிறைவேற்று தலைவருமான சூரி ராஜனுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்தானது. இது பிரபல வர்த்தக நாமத்துக்கும் பிரபல நடிகைக்கும் இடையிலான பங்குடமையின் ஆரம்பத்தை குறிக்கிறது. நிறுவனத்துக்கு ஒரு மைல் கல் நடவடிக்கையாகும்.

விளம்பரங்கள் உள்ளடங்கலாக சூர்யாவின் பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் யசோதா இணைந்து இருப்பார். யசோதாவுக்கு இலங்கை மக்களிடையே உள்ள பெரும் வரவேற்பு சூர்யாவுக்கு ஒரு சாதகத் தன்மையை ஏற்படுத்தும். இந்த பங்குடமையானது இரு தரப்புக்கும் சந்தையில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தும் அத்துடன் அதன் பயணத்தையும் சிறப்பான தாக்கும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.03.2023 இல் வெளியிடப்பெற்றது.